தாம் மாசி மாதம் 20ஆம் தேதி வரைந்து விடுத்த கடிதம் பங்குனி மாதம் 2ஆம் தேதி காணப்பட்டது. அக் கடிதத்திற் குறித்த வண்ணம் சிதம்பரத்தில் வசிப்பது சம்மதமானாலும் இதுவிஷயத்தில் வசிப்பது சம்மதமின்று. ஏனெனில் சிதம்பரத்தில் பச்சையப்ப முதலியார் இஸ்கூல் கிரமமல்லாததாகத் தற்காலத்தில் காணப்படுகிறது. அன்றியும் அவ்வலுவல் இராஜாங்க சம்பந்த அலுவலாகவிருந்தால் நன்றாகவிருக்கும். அவ்வாறின்றி ஒருமையில்லாத சில இந்துக்கள் சம்பந்தமானதாக விருக்கின்றது. சிதம்பரம் தற்காலத்தில் நமது உயிர்த் துணைவராகிய நடராஜப் பெருமானைப் பற்றி நாம் போவதற்கும் இரண்டொரு தினம் இருப்பதற்கும் தக்கதே யன்றி வேறொரு வகையாலுந் தக்கதாகத் தோன்றவில்லை. ஆயின் அது கலிகால வண்ணம். ஆகலின் இதனடியில் எழுதுஞ் சில வரிகளிற் குறித்த வண்ணத்தை முழுதும் நம்ப வேண்டும். அதாவது நான் இந்த மாசக் கடையிலாவது சித்திரை மாச முதலிடை கடையிலாவது அவ்விடம் வருவேன். வந்த பின்பு என் கருத்தை வெளிப்படுத்துகிறேன். எந்த விதத்தாலும் தாம் என் சமீபத்திலிருக்கவேண்டு மென்றே இரவும் பகலும் எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன். என் பிரார்த்தனைப் பிரகாரம் இன்னுஞ் சில காலத்துள் கூட்டுவிப்பார். இதற்குச் சந்தேக மிராது. ஆதலின் அங்கு நான் வருமளவும் சகித்திருக்க வேண்டும். சிவ பஞ்சாக்கரத்தை சதா கருத்தில் வைத்துக் கொண்டே காரியங்களை நடத்த வேண்டும். எவ்வகையிலும் என் தேகம் இருந்தால் சமீபத்திலிருக்கும்படி சிவானுக்கிரகத்தால்

செய்துக்கொள்ளுவேன். தாம் இது குறித்து சலனப்பட வேண்டாம். தேக முதலான கருவிகளைப் பக்குவமாகப் பாராட்டிக் கொண்டு வரவேண்டும். மேற் குறித்தபடி வருகிறேன். விண்ணப்பக் கலிவெண்பா, நெஞ்சறிவுறுத்தல் இவைகளை அங்கிருந்து இங்கு வந்திருந்து பிரயாணப்பட்டங்கு வருகின்ற பெரிய தமக்கையார் வசத்தில் சுமார் ஒரு மாதமாயிற்று, கொடுத்தனுப்பினேன். அவாள் மத்தியில் கருங்களவால் கையில் மெய்யில் உள்ளவைக ளெல்லாம் இழந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். அவாள் இன்னு மத்தியில் பந்துக்களிடமாக இருக்கின்றார்கள் போலக் காணுகின்றது. ஆகலின் அவர்கள் அவ்விடம் வந்தவுடன் மேற்படி புத்தகங்களைச் சேர்ப்பிப்பதும் அல்லாததும் உடனே அவசியம் எனக்குத் தெரியப்படுத்தவேண்டும். மற்ற சங்கதிகளெல்லாம் நான் அவ்விடம் வந்த பின்பு பேசிக்கொள்ளலாம். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

பங்குனி மாதம் 6ஆம் நாள்.

இங்ஙனம்

சிதம்பரம் இராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் பெத்து நாய்க்கன்பேட்டை

ஏழுகிணற்றுக்குக் கீழண்டை வீராசாமிப்பிள்ளை

வீதியில் மகா ராஜ ராஜ ஸ்ரீ சுப்பராயப் பிள்ளையவர்கள்

வீட்டுக்கு எதிர் வீட்டில் மகா ராஜ ராஜ ஸ்ரீ இரத்தின

முதலியார் அவர்களுக்கு.

ஜரூர் ஜரூர்.

TRANSLATION – To Chiranjeevi Rathina Mudaliar, who excels in love, knowledge and good conduct and shines like

our own eyes: by Siva's grace, may long life, all wealth and the wisdom of Siva increase ever more.

Here the respected Nayakkar and I are well. I wish to hear often the news of your welfare there.

Your letter, written and sent on the 20th of the month of Masi, was received on the 2nd of the month of Panguni. Though living in Chidambaram, as that letter proposed, is agreeable, living there for this purpose is not. For at present the Pachaiyappa Mudaliar school in Chidambaram is seen to be not in proper order. Besides, if that post were a government post, it would be well. It is not so; it is connected with certain Hindus who are not of one mind. Chidambaram at present is fit only for us to go to, for the sake of Lord Nataraja, the companion of our life, and to stay a day or two; it does not appear fit in any other way. But that is the way of the Kali age. So you must fully trust what is set down in the few lines written below. That is, I will come there at the end of this month, or at the beginning, middle or end of the month of Chithirai. After I come, I will make my mind known. Night and day I pray to our Lord that, in one way or another, you may be near me. As I pray, He will bring it about within a little more time. There will be no doubt of this. So you must bear with things until I come there. You must carry on your affairs keeping the Five Letters of Siva always in mind. In every way, if my body lasts, I will by Siva's grace arrange for you to be near me. Do not be unsettled about this. You must look after the body and the other faculties with care. I will come as written above. Vinnappa Kalivenba and Nenjarivuruthal: about a month ago I sent these with my eldest sister, who had come here from there and set out to go back there. I heard that on the way she lost everything in her hands and on her person through a robbery. It seems she is still staying with relatives on the way. So as soon as she arrives there, you must let me know at once, without fail,

whether she delivers the said books or not. All other matters we can talk over after I come there. Chiranjeevi, Chiranjeevi.

Panguni 6.

Thus, Chidambaram Ramalingam.

This is for Maharajarajasri Rathina Mudaliar, in the house opposite the house of Maharajarajasri Subbaraya Pillai, Veerasami Pillai Street, east of the Seven Wells, Pethu Naickenpet, Chennapattanam. Urgent. Urgent.

COMMENTARY – Chidambaram, the town of Nataraja, is dear to Vallalar, and still he will not have his disciple settle there for an uncertain post. The disorder he sees he puts down to the Kali age, the present dark age of the world. Vinnappa Kalivenba and Nenjarivuruthal are two of his own long poems.

12. BRAHMIN FRIENDSHIP, LIKE MILK AND WATER

To Irukkam Rathina Mudaliar, Chennai. 7 May 1861 (Chithirai 27)

A short letter promising a visit before the end of Vaikasi, to see Lord Thiyagaraja and the disciple. It closes with a one-line message for Varadacharya Swamigal, who had come to Thiruvaiyindirapuram.

உ

என் மனத்தில் இடைவிடாது விளங்குகின்ற குணமணியாகிய சீரஞ்சீவி ரத்தன முதலியாருக்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுஞ் சிவக்கியானமுஞ் சகல சம்பத்தும் மென்மேல் உண்டாவதாக. தமது சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விருப்ப முள்ளவனாக விருக்கிறேன். நான் வையாசி மாசம் 30ஆம் தேதிக்குள்ளே அவ்விடம் வருவேன். அவசியம் தியாகராஜப் பெருமானையும் உன்னையும் காண வேண்டும் என்கிற விருப்பம் விசேஷ முள்ளவனாக விருக்கிறேன். ஆதலால் வருவது நிச்சயம் நிச்சயம். இது அன்றி பகவத்

பத்தியிற் சிறந்தவராகிய வரதாசாரிய சுவாமிகள் திருவையிந்திரபுரத்துக்கு வந்ததாகக் கேள்விப்பட்டேன். அந்த சுவாமிகளைச் சென்னப்பட்டணத்தில் தாம் கண்டால் ஒன்று சொல்லவேண்டுவது.

அதென்ன வெனில்

பாலு நீரும் போலும் பார்ப்பன சிநேகம்

என்று நான் தெரிவித்ததாகத் தெரிவிக்கவேண்டும்.

வேணும் சிரஞ்சீவி.

சித்திரை மாதம்

27ஆம் நாள்

இங்ஙனம்

சிதம்பரம்

இராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் பெத்து நாய்க்கன் பேட்டை

ஏழுகிணற்றண்டை வீராசாமிப் பிள்ளை தெருவு,

கலக்டர் கச்சேரி சுப்பராயப் பிள்ளை அவர்கள்

வீட்டிற்கு எதிர்வீடு மகாராஜராஜ ஸ்ரீ முதலியார்

ரத்தன முதலியார் அவர்கட்கு

TRANSLATION – To Chiranjeevi Rathina Mudaliar, the jewel of good qualities who shines unceasingly in my mind: by Siva's grace, may long life, the wisdom of Siva and all wealth increase ever more. I wish to hear the news of your welfare often. I will come there before the 30th of the month of

Vaikasi. I have a special wish to see, without fail, Lord Thiyagaraja and you. So my coming is certain, certain. Besides this, I heard that Varadacharya Swamigal, who excels in devotion to Bhagavan, has come to Thiruvaiyindirapuram. If you see that Swami in Chennapattanam, there is one thing you must tell him.

It is this: 'Brahmin friendship is like milk and water.' Tell him that I said so.

This I ask. Chiranjeevi.

Chithirai 27.

Thus, Chidambaram Ramalingam.

This is for Maharajarajasri Mudaliar Rathina Mudaliar, in the house opposite the house of Subbaraya Pillai of the Collector's office, Veerasami Pillai Street, by the Seven Wells, Pethu Naickenpet, Chennapattanam.

COMMENTARY – Milk and water, once mixed, cannot be told apart. The editor's footnote sets beside this line two stanzas of Thiru Arutpa (138 and 140), in which Vallalar asks the Lord of Thiruthanigai that the two of them be as milk and water, never apart. What the Swami made of the message, the letters do not say.

13. THE MEASURE IN EATING AND IN UNION

> *To Irukkam Rathina Mudaliar, Chennai. 10 June 1861 (Vaikasi 30)*
>
> *Vallalar gives his postal address, Karunguzhi near Bhuvanagiri, after a wrongly routed letter took eleven days, and then teaches his married disciple moderation in food and in marital union. The editor notes that the place of the signature on the original has been cut out for worship, and that, it is said, the signature was kept in an amulet and worn.*
>
> ๒

சிவமயம்

அன்பு அறிவு தயவு சிவநேய முதலிய நற்குணங்களிற் சிறந்து என்னிரு கண்மணி போன்றென் னிதயத் திருக்கும் சிரஞ்சீவி சிரஞ்சீவி ரத்தன முதலியாரவர்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சிவக்கியானமும் சௌக்கிய தேகமும் சகல சம்பத்து மேன்மேலுண்டாவனவாக. தமது சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன்.

தாம் வைகாசி மாதம் 19ஆம் தேதியில் வரைந்துவிடுத்த கடிதம் மேற்படி மாதம் 30 ஆந்தேதியில் என்னிடம் வரப்பெற்றேன். அவ்வளவு காலம் கடிதம் தாமசப் பட்டதற்குக் காரணம் கடிதம் மேல் விலாசத்தில் கூடலூர் ஜில்லா தபால் ரயிட்டர் என்று குறித்திருந்தது பற்றி. ஆகலில் இனி வரைந்தனுப்பும்போது பரங்கிப்பேட்டை தபால் ரயிட்டர் பார்வையிட்டு புவனகிரியைச் சார்ந்த கருங்குழி என்று வரையவும். அன்றி, கூடலூர் ஜில்லா தபால் ரயிட்டர் மேல்விலாசம் பார்வையிட்டு மேற்படி துக்குடியைச் சார்ந்த கருங்குழியிலிருக்கும் என்றாவது வரையவும். இவ்விருவகையுமில்லாமல் கூடலூர் ஜில்லா தபால் ரயிட்டர் மேல் விலாசம் பார்வையிட்டு புவனகிரியைச் சார்ந்த கருங்குழி என்று வரைந்தால் நாட் செல்வதுமன்றி தபால் கூலியும் இரட்டிக்கும். இது அறிக. இனி,

தாம் தம்முடைய தேகத்தை சாக்கிரதையாக உபசரித்து வர வேண்டும். சாக்கிரதை என்பது அருந்தல் பொருந்தல்களில் மிதபோசனம் மிதபோகம். மித போஜனமாவது - கோபம் - விராகம் - அலக்ஷியம் - முயற்சி - விரைவு இவை முதலிய ஏதுக்களால் குறைத்தல் - விருந்து சுவைவிருப்ப, முதலிய ஏதுக்களால் ஏற்றல் இல்லாமல் சமமாகப் பொசித்தலாம். மித போகமாவது அதிபரிச்சயம் அதிஞாபக முதலிய ஏதுக்களால் இரவு பகல் தோற்றாது பொருந்தல். விராகம் அலக்ஷிய முதலிய ஏதுக்களால் பொருந்தா திருத்தல். இவை இரண்டுமின்றி மாதத் திரண்டுவிசை மாதரைப்புல்குவது என்றபடி பொருந்தலாம். ஆகலின் இவ்வாறு நடத்தவேண்டும். இனி மருந்து கொள்ளும்போது நெய் நல்லதாகக்கொண்டு சாப்பிடவேண்டும். பாலும் அவ்வாறே.

நான் தம்முடைய தேகத்திற்கு விசேஷம் திடம் உண்டாகத்தக்க அவுஷதங்கொண்டு வருவேன். அது பரியந்தம் முன் குறித்தபடி சாக்கிரதையாக இருக்கவேண்டும். நமக்கு எவ்விதத்தாலும் சிவ பெருமான் திருவடியும் சிவபஞ்சாட்சரியும் அன்றி வேறு சகாயில்லை. ஆகலில் அவைகளை இடைவிடாது சிந்திக்கவேண்டும். மகாராஜராஜ ஸ்ரீ நாயக்கரவர்களுடைய சம்மதமும் இது. வேணும்.

சிரஞ்சீவி.

வையாசி மாதம்

30ஆம் நாள்

சிதம்பரம்

இராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் பெத்துநாயக்கன் பேட்டை

ஏழு கிணற்றுக்கு அடுத்த வீராசாமிப் பிள்ளைத்

தெருவு கலக்டர் கச்சேரி மகாராஜராஜ ஸ்ரீ சுப்பராயப் பிள்ளை

அவர்கள் வீட்டிற்கு எதிர்வீடு மகாராஜராஜ ஸ்ரீ

இரத்தின முதலியார் அவர்கட்கு

சரூர் சரூர் சரூர்.

TRANSLATION – To Chiranjeevi, Chiranjeevi Rathina Mudaliar, who excels in love, knowledge, compassion, love of Siva and the other good qualities, and dwells in my heart like the pupils of my two eyes: by Siva's grace, may long life, the wisdom of Siva, a healthy body and all wealth increase ever more. I wish to hear the news of your welfare often.

The letter you wrote and sent on the 19th of the month of Vaikasi reached me on the 30th of the same month. The reason the letter was delayed so long is that the address on it read 'Cuddalore District Post Writer'. So when you write from now on, write: 'Attention of the Parangipettai Post Writer, Karunguzhi, near Bhuvanagiri'. Or else write at least: 'Attention of the Cuddalore District Post Writer, residing at Karunguzhi in the said division'. If, instead of either of these two, you write 'Attention of the Cuddalore District Post Writer, Karunguzhi near Bhuvanagiri', not only will days be lost, the postage too will double. Note this. Now,

You must look after your body with care. Care means, in eating and in union, moderate food and moderate enjoyment. Moderate food is eating evenly, without cutting it down for reasons such as anger, distaste, neglect, exertion, hurry and the like, and without increasing it for reasons such as feasts, the wish for flavor and the like. Moderate enjoyment is this: not uniting without regard to night or day, for reasons such as too much familiarity, too much thought of it and the like, and not abstaining altogether, for reasons such as distaste, neglect and the like; free of both these, one may unite as the saying goes, 'embracing a woman twice a month'. So you must conduct yourself in this way. Further, when you take medicine, you must take it with good ghee. Milk likewise. I will bring a medicine that will give your body special strength. Until then you must take care as written above. For us there is no help in any way other than the holy feet of Lord Siva and the Five Letters of Siva. So you must think on them without a break. This is also the view of the respected Nayakkar. This I ask.

Chiranjeevi.

Vaikasi 30.

Chidambaram Ramalingam.

This is for Maharajarajasri Rathina Mudaliar, in the house opposite the house of Maharajarajasri Subbaraya Pillai of the Collector's office, Veerasami Pillai Street, next to the Seven Wells, Pethu Naickenpet, Chennapattanam. Urgent. Urgent. Urgent.

COMMENTARY – Mitha bhojanam and mitha bhogam, moderate food and moderate enjoyment, are defined by the ways people go wrong in each direction. Anger, hurry and distaste starve the body as surely as feasts and the wish for flavor overload it. Vallalar speaks to a married disciple about marital union with the same plainness, and then places the whole of bodily care under the holy feet of Siva and the Five Letters.

14. MEDITATION ON SIVA'S FIVE LETTERS

To Irukkam Rathina Mudaliar, Chennai. 5 September 1861 (the year Durmathi, Avani 22)

Rathina Mudaliar had visited and gone back, and Vallalar asks how he has fared since. A visit planned for Purattasi is put off to Margazhi after the death of Reddiar, head of the house where Vallalar took his meals. The envelope gives Karunguzhi as the place of stay.

உ

சிவமயம்

அன்பு அறிவு தயவு முதலிய சுபகுணங்களைப் பூண்டு எமது கருத்தினுங் கண்ணினும் உவந்து உலாவுகின்ற சி. இரத்ந முதலியார் அவர்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சிவக்கியானமும் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவதாக.

தமது சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன். தாம் இவ்விடம் விட்டுப் பிரயாணப் பட்ட நாள் தொடங்கி நாளது வரையில் தமது சுபசரித்திர வண்ணம் இவ்வண்ணமென்று விசேஷம் தெரிந்து கொள்ளாதவனாக

விருக்கிறேன். ஆதலால் அதை தெரிவிக்கவேண்டும். நான் புரட்டாசி மாதம் அவ்விடம் பிரயாணப்பட்டு வருவதாக ஓர் காரியம் பற்றி நிச்சயித்திருந்தேன். அந்த நிச்சயத்துக்கு ஓர் தடை நேரிட்டது. என்னெனில் நான் புசித்து வருகின்ற கிரகத்தில் யோக்கியராகவும் தலைவராகவும் இருந்த ரெட்டியார் நாளது மாதம் 20ஆம் நாள் பதவி யடைந்தார். ஆதலால் உடனே வருவது ஓர் வகை நிந்தைக் கிடமாக இருக்கின்றது. அதனால் மார்கழி மாதம் பிரயாணப்படுவதாக எண்ணுகின்றேன். எம்பெருமான் எண்ணம் எப்படியோ தெரிந்ததில்லை. இவ்விடத்தில் மழையில்லாமல் அதிக வெப்பமாக இருக்கின்றது. அவ்விடத்திலெப்படி யிருக்கின்றதோ தெரிந்ததில்லை. தாம் சிவபஞ்சாக்ஷர தியான பரராகி சதா சந்தோஷ சகிதராக இருக்கவேண்டுவதே என் வேண்டுகோளாக விருக்கின்றது. தேக முதலிய கருவிகளைத் தக்க வண்ண நடத்தி வர வேண்டுகிறேன். மகாராஜராஜ ஸ்ரீ திருவேங்கட முதலியார் முதலானவர்களுக்கும் வந்தனம் குறிப்பிக்க வேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி. இங்கு மகாராஜராஜ ஸ்ரீ நாயக்கரவர்கள் க்ஷேமம்.

துன்மதி ஞ

ஆவணி மாதம்

22ஆம் நாள்

சிதம்பரம்

இராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் பெத்துநாய்க்கன்பேட்டை

ஏழு கிணற்றுக்கு அடுத்த வீராசாமிப் பிள்ளை

தெருவு கலக்டர் கச்சேரி மகாராஜராஜ ஸ்ரீ சுப்பராயப்

பிள்ளை வீட்டுக்கு எதிர்வீடு மகாராஜராஜ ஸ்ரீ இரத்ந

> முதலியாரவர்களுக்கு
>
> இருந்துவருமிடம் கருங்குழி.

TRANSLATION – To Chiranjeevi Rathina Mudaliar, who wears love, knowledge, compassion and the other auspicious qualities, and moves gladly in our thoughts and before our eyes: by Siva's grace, may long life, the wisdom of Siva and all wealth increase ever more.

I wish to hear the news of your welfare often. From the day you set out from here up to this day, I have not come to know in any detail how your affairs stand. So you must let me know. I had decided, on a certain matter, to set out for there in the month of Purattasi. A hindrance has come to that decision. It is this: Reddiar, who was a worthy man and the head of the house where I take my meals, attained the higher state on the 20th of this month. So to come at once would give room for a kind of reproach. Therefore I am thinking of setting out in the month of Margazhi. What our Lord intends, I have not come to know. Here there is no rain and it is very hot. How it is there, I do not know. My request is that you be given over to meditation on the Five Letters of Siva and remain always joyful. I ask that you keep the body and the other faculties as is fitting. Convey my greetings to the respected Thiruvenkata Mudaliar and the others. Chiranjeevi, Chiranjeevi. Here the respected Nayakkar is well.

The year Durmathi, the month of Avani, the 22nd day.

Chidambaram Ramalingam.

This is for Maharajarajasri Rathina Mudaliar, in the house opposite the house of Maharajarajasri Subbaraya Pillai of the Collector's office, Veerasami Pillai Street, next to the Seven Wells, Pethu Naickenpet, Chennapattanam. Place of stay: Karunguzhi.

COMMENTARY – "Attained the higher state" (padhavi adainthar) is a gentle way of saying that someone has died. Vallalar puts off his travel out of regard for the household that fed him. His request to the disciple joins two things often kept apart, constant meditation on the Five Letters and constant joy.

15. WRITING WITHOUT HOLDING BACK

To Irukkam Rathina Mudaliar. Thai 28 (no year printed)

Nayakkar has had word by post of his mother's death and is setting out on that account. Vallalar asks Rathina Mudaliar to borrow twenty rupees for him, as he has done before, and promises to clear the disciple's own burdens when he comes.

உ

சிவமயம்

அற்புத குணாகரமாகி யெம்முள்ளத் தமர்ந்த சிரஞ்சீவி ரத்ந முதலியார்க்கு தீர்க்காயுளும் சிவஞானமும் சகல சம்பத்து மேன் மேல் உண்டாவனவாக. அவ்விடத்திய சுபசரித்திரங்களை அடிக்கடி கேட்க விருப்பமுள்ளவனாக விருக்கிறேன். இதனடியில் வரைகின்ற சில வரிகளின் கருத்து மனத்தைச் சலிப்பிக்கு மென் றுணர்ச்சி தோற்றினும் வரையாது வரைகின்றேன்.

மகாராஜராஜ ஸ்ரீ நாயக்கரவர்கள் தங்கள் தாயார் பரமபத மடைந்துவிட்டதாகத் தபாலில் கடிதம் வரக்கண்டு அதனிமித்தம் ஆண்டு அடைகின்றனர். முன்போல் பிரயாசம் எடுத்துக்கொண்டு இருபது ரூபாய் கடன் வாங்கத்தக்க இடத்தில் வாங்கிக் கொடுத்தால் நான் அவ்விடம் வந்தபின் அவ்விடத்துத் தமக்கு இப்படிப்பட்ட விஷயங்களில் நேரிட்டிருக்கிற நிர்ப்பந்தங்களை யெல்லாம் திருவருட்டுணையால் நிவர்த்தி செய்யக்கூடும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

நான் இன்னும் சிலநாளில் அவசியம் அவ்விடம் வருவேன். மகாராஜராஜ ஸ்ரீ திருவேங்கட முதலியார் முதலானவர்களுக்கு வந்தனம்.

தை மாதம்

28ஆம் நாள்

இங்ஙனம்

சிதம்பரம்

இராமலிங்கம்.

இஃது

மகாராஜராஜ ஸ்ரீ முதலியார் இரத்தின முதலியார்

அவர்கட்கு.

TRANSLATION – To Chiranjeevi Rathina Mudaliar, a mine of wonderful qualities, seated in our heart: may long life, the wisdom of Siva and all wealth increase ever more. I wish to hear often the news of the welfare there. Though I feel that the sense of the few lines I write below will weary your mind, I write them without holding back.

The respected Nayakkar, having received a letter by post that his mother has attained the supreme state, is going there on that account. If, taking trouble as before, you borrow twenty rupees where it can be borrowed and give it, then after I come there, all the pressures that have come upon you there in matters of this kind can be cleared by the help of Divine Grace. Chiranjeevi, Chiranjeevi.

I will certainly come there in a few more days. Greetings to the respected Thiruvenkata Mudaliar and the others.

Thai 28.

Thus, Chidambaram Ramalingam.

This is for Maharajarajasri Mudaliar Rathina Mudaliar.

COMMENTARY – Varaiyathu varaithal, the editor's title, plays on the verb varai, which means both to write and to set a limit. To write varaiyathu is to write without restraint, and also to write what one would rather leave unwritten. The request that follows, another loan, is what he hesitates to lay on his disciple.

16. STAYING ALONE

To Irukkam Rathina Mudaliar, Chennai. Masi 15 (no year printed)

Written while Vallalar was staying alone, for another reason, at a sugar-cane garden at Nellikuppam near Cuddalore. A woman in poor health, going to Chennai, carries the letter, and Rathina Mudaliar is asked to borrow two varagans for her.

உ

சிவமயம்

அன்பு அறிவு ஒழுக்கங்கள் முதலிய சுப குணங்களிற் சிறந்த தங்கட்கு சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்தும் மேன்மேலுண்டாவனவாக. புண்ணியப் பயனாற் பெற்ற தேகத்தை கூடிய வரையில் சாக்கிரதையோடு பக்குவ மார்க்கத்தில் நடத்த வேண்டும். நான் பங்குனி மாசக் கடையில் அவ்விடம் வருகிறேன். இதன்றியும் இந்தக் கடிதம் கொண்டு வருகிற அம்மாளுக்குத் தாங்கள் கடன் வாங்குகிற இடத்தில் இரண்டு வராகன் கடன் வாங்கிக் கொடுக்க வேண்டும். தங்களுக்கு இப்படிப்பட்ட விடயத்தில் நேரிடுகிற சல்லியங்களை கடவுள் விரைவில் நிவர்த்தி செய்விப்பார். இது நிச்சயம். தற்காலம் நான் வேறோர் நிமித்தம் தனித்து கூடலூரைச் சார்ந்த நெல்லிக்குப்பம் கரும்பாலையாடுந் தோட்டத்தி லிருக்கிறேன். இந்தக் கடிதம் கொண்டு வருகின்றவர்கள் இவ்விடத்தில் வந்து தேக மெலிவைக் காட்டியபடியால் — இதே சமயத்தில் இவ்விடத்தில் எனக்கு

வழக்கமாகக் கடன் கொடுக்கிறவர்கள் சமீபத்திலில்லை. இவர்கள் தேக பக்குவ நிமித்தம் அவ்விடம் போவதாகக் குறித்தபடி தங்களுக்கு இந்தப் பிரயாசம் வைத்தேன். மற்ற சங்கதிகளை நான் அவ்விடம் வந்தபோது தெரிந்து கொள்ளலாம்.

மாசி மாதம்

15ஆம் நாள்.

சிதம்பரம்

இராமலிங்கம்.

இஃது

சென்னையில் மஹாராஜஶ்ரீ இரத்தின

முதலியாரவர்கள் சமுகத்திற்கு

TRANSLATION – To you, who excel in love, knowledge, good conduct and the other auspicious qualities: by Siva's gracious glance, may long life and all wealth increase ever more. The body, gained as the fruit of merit, you must keep, as far as you can, with care and in a well-ordered way. I will come there at the end of the month of Panguni. Besides this, you must borrow two varagans where you usually borrow, and give them to the lady who brings this letter. God will soon clear the troubles that come to you in matters of this kind. This is certain. At present, for another reason, I am staying alone in a garden where the sugar-cane press is worked, at Nellikuppam near Cuddalore. Since the people bringing this letter came here and showed the weakness of their bodies, and at this very time those who usually lend to me here are not nearby. As they said they were going there for the sake of their health, I have put this trouble on you. Other matters you can learn when I come there.

Masi 15.

Chidambaram Ramalingam.

This is to the presence of Maharajasri Rathina Mudaliar, in Chennai.

COMMENTARY – The body is called the fruit of merit (punniyam), something earned and to be kept with care. The same letter carries a sick woman's need to Chennai. Vallalar's own lenders were away, so he turned to his disciple at once, without asking whether she had any claim on him.

17. STAYING IN MANY PLACES

To Irukkam Rathina Mudaliar, Chennai. 15 July 1862 (Adi 10)

Vallalar prays for the disciple's wishes and for his heart to rest on Siva alone, and gives a short rule for living in the world. Nayakkar is to wait in Chennai until Vallalar comes, and no return address is given because Vallalar is staying in many places.

உ

சிவமயம்

அன்பு அறிவு முதலிய நல்லொழுக்கத்திற் சிறந்து
என்னுயிரையொத்து உள்ளத்திலிருந்த சிரஞ்சீவி ரத்ந
முதலியார்க்கு சிவ கடாக்ஷத்தினால் தீர்க்காயுளுஞ் சகல
சம்பத்தும் மேன்மேல் உண்டாவதாக.

அவ்விடத்திய சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க
விரும்புகிறேன்.

தமது கருத்தின் வண்ண முடிதல் வேண்டுமென்றி யானுந்
திருவருளைப் பிரார்த்திக்கின்றேன். அன்றி வேறென் செயக்
கடவேன். அன்றி, தமதிதயம் சிவபெருமான்
திருவடிக்கண்ணே யன்றிப் பிறவொன்றினும்
பொருந்தாதிருத்தல் வேண்டு மென்றும் பிரார்த்திக்கின்றேன்.
தாம் உலகியற்கண் ஒழுகுங்கால் கழிநடை யொருவன்

கட்பார்வை போன்றொழுகல் வேண்டு மென்றும் பிரார்த்திக்கின்றேன். அன்றி உணவுறக்க முதலியவற்றா லுடம்பை மெல்லென நடத்தல் வேண்டும். இஃதென் வேண்டுகோள்.

இனி மகாராஜராஜ ஸ்ரீ நாயக்கரவர்கள் மகாராஜராஜ ஸ்ரீ வேலு முதலியாரிடமாக இருப்பதாக அவரது கடிதத்தா லறிந்தேன். தமதிடத்திலிருப்பதாகச் சிலர் சொல்லா லறிந்தேன்.

அவரெங்கு இருப்பினும் அவர்க்குத் தாம் அறிவிப்பது — நான் சென்னபட்டணம் அவசியம் வரவேண்டும். ஆதலின் நான் அவ்விடம் வருவதற்கு எவ்வளவு காலம் பிடித்தாலும் அதுபரியந்தமும் பட்டணத்தில் தானே இருக்கவேண்டும். நான் வந்த பின்பு உடன் கூடிக்கொண்டு ஆண்டவன் திருவுள்ளப்படி சஞ்சரிக்கலாம். இதனைத் தெரிவிக்க வேண்டும். தற்காலத்தில் யான் வசிக்குமிடம் இதுவென்று குறிப்பதற்குக் கூடாத பலவிடங்களாக இருத்தலில் இருக்குமிடம் இதுவென்று குறிக்கவில்லை. மன்னிக்கவேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி சிரஞ்சீவி.

ஆடி மாதம் 10ஆம் நாள்

இராமலிங்கம்.

இஃது

சென்னபட்டணம் பெத்து நாயக்கன்பேட்டை

ஏழுகிணற்றுத்தெருவுக்கு அடுத்த கீழண்டை

வீராசாமிப்பிள்ளை தெருவு கலக்டர் கச்சேரி

சுப்பராயப் பிள்ளை வீட்டுக்கு எதிர்வீடு

மகாராஜராஜ ஸ்ரீ இரத்தின

முதலியாரவர்கட்கு.

TRANSLATION – To Chiranjeevi Rathina Mudaliar, who excels in love, knowledge and the other good conduct, and dwells in my heart like my own life: by Siva's gracious glance, may long life and all wealth increase ever more.

I wish to hear often the news of the welfare there.

I too pray to Divine Grace that things may turn out as you intend. What else should I do? Further, I pray that your heart may cling to nothing at all except the holy feet of Lord Siva. I pray too that, when you move in worldly life, you move like the gaze of one who walks along a pole. Further, you must keep the body gently, with food, sleep and the rest. This is my request.

Now, I learned from his letter that the respected Nayakkar is with the respected Velu Mudaliar. I learned from what some people said that he is at your place.

Wherever he may be, what you are to tell him is this: I must come to Chennapattanam without fail. So, however long it takes me to come there, he must stay in the city until then. After I come, we can go about together as the Lord wills. You must let him know this. At present the places where I stay are many, and cannot be named as one, so I have not written where I am staying. You must forgive me. Chiranjeevi, Chiranjeevi, Chiranjeevi.

Adi 10.

Ramalingam.

This is for Maharajarajasri Rathina Mudaliar, in the house opposite the house of Subbaraya Pillai of the Collector's office, Veerasami Pillai Street, on the east side next to Seven Wells Street, Pethu Naickenpet, Chennapattanam.

COMMENTARY – Kazhinadai is walking along a pole or rope, the acrobat's art. The walker's eyes never leave the line, whatever moves around him. Vallalar asks Rathina Mudaliar

to go through worldly life with that fixed attention, and in the same breath to be gentle with his body.

18. STAYING AT CUDDALORE

To Irukkam Rathina Mudaliar, Chennai. Aippasi 23 (no year printed)

Written from Chidambaram on Aippasi 23, with no year given. Vallalar tells Rathina Mudaliar that he left on Aadi 5, stayed at Cuddalore and came back to Karunguzhi on Aippasi 14, and that he now plans to travel to a town in the northwest and from there to Thiruvottiyur.

உ

சிவமயம்

அன்பு அறிவு செறிவு கல்வி கேள்வி முதலியவற்றினிறைந்து சிவ பெருமான் றிருவடி நேயத்திற் சிறந்து என்னன்பிற் கியைந்து விளங்கிய சிரஞ்சீவி இரத்திந முதலியாருக்கு சிவ கடாக்ஷத்தால் சிவக்கியானமும் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன்மேலுண்டாவதாக.

தமது சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். நான் ஆடி மாதம் 5ஆம் தேதி புறப்பட்டு கூடலூர்க்குப் போய் ஐப்பசி மாதம் 14ஆம் தேதி கருங்குழிக்கு மீட்டும் வந்தேன். வரினும் இன்னும் இருபது தினத்தில் வடமேற்கே ஓர் ஊர்க்குப் போய் அங்கிருந்து திருவொற்றியூர்க்கு வருவதாக நிச்சயித்திருக்கிறேன். நான் வடமேற்கே போகக் கருதிய ஊர்க்குப் போய் அவ்விடத்தே முடிக்க வேண்டிய காரியத்தை முடித்துக்கொண்டு அங்கிருந்து புறப்படுவதற்கு சுமார் 3 மாசம் பிடிக்கும் போல் தோற்றுகிறது. ஆகலால், தாம் தேக முதலிய கருவிகளை செவ்வனிறுத்தி நடத்தவேண்டுமென்று எழுதுவது தவிர வேறொன்றும் எழுதுவது அவசியமாகத் தோற்றவில்லை நமது சிவபெருமான் திருவடிகளையும் சிவ பஞ்சாக்ஷரியையும் இடைவிடாமல் தியானஞ் செய்து வரவேண்டு மென்பது ஒன்றே முக்கியம் என்று தமது குறிப்பிற் காணப்பட்டது ஆகலிற் குறித்தேனில்லை. சாக்கிரதையோடு

இருக்கவேண்டும். மகாராஜராஜஸ்ரீ திருவேங்கிட முதலியார் முதலானவர்களுக்கும் என் வந்தனம் குறிப்பிக்க வேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

ஐப்பசி 23ஆம் நாள்

சிதம்பரம்

இராமலிங்கம்.

இஃது

சென்னபட்டணம் ஏழுகிணற்றுக்கடுத்த வீராசாமி முதலியார் வீதி மஹாராஜராஜஸ்ரீ முதலியார் இரத்தின முதலியார் அவர்கள் திவ்ய சமுகத்திற்கு.

TRANSLATION – To Chiranjeevi Rathina Mudaliar, who is full of love, knowledge, self-restraint, learning, listening and the rest, who excels in love for the holy feet of Lord Siva, and who shines in accord with my love: by Siva's gracious glance may knowledge of Siva, long life and all prosperity increase more and more.

I wish to hear news of your welfare often. I set out on the 5th of the month of Aadi, went to Cuddalore, and came back again to Karunguzhi on the 14th of the month of Aippasi. Though I have come back, I have decided that in another twenty days I will go to a town to the northwest and from there come to Thiruvottiyur. It looks as though it will take about 3 months for me to go to the town in the northwest that I have in mind, finish the business that must be finished there, and set out from there. So, apart from writing that you must keep the body and the other faculties well settled and carry them on properly, it does not seem necessary to write anything else. That the one important thing is to meditate without a break on the holy feet of our Lord Siva and on the Five Letters of Siva was plain from your own note, and so I have not written it. Be careful. Convey my greetings to the

respected Thiruvengada Mudaliar and the others. Chiranjeevi. Chiranjeevi.

Aippasi 23 Chidambaram Ramalingam.

This is for the divine presence of Maharajarajasri Mudaliar Rathina Mudaliar, Veerasami Mudaliar Street, beside the Ezhukinaru, Chennai.

COMMENTARY – The Five Letters of Siva (Siva Panchakshari) are Si-va-ya-na-ma. Rathina Mudaliar's own note already named their unbroken meditation as the one essential thing, so Vallalar does not repeat the teaching and asks only for care of the body.

19. RELIEF FROM PRESSING TROUBLES

To Irukkam Rathina Mudaliar, Pethu Naickenpet, Chennai. No date printed

No date is printed, but the letter reports a death on the night of Wednesday, Panguni 27. Ramakrishna Reddiar, master of the house where Vallalar took his meals, has died, and Rathina Mudaliar is asked to pass the news, with a promise that Vallalar will come to Chennai after Aani 20, to Sundarammal, her husband, Nayakkar and Velu Mudaliar.

உ

சிவமயம்

சுப குணங்களிற் றலைமை பெற்றுயர்ந்து எமது கண்மணி போன்று விளங்கிய தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சிந்தித மனோரத சித்தியு மேன்மேலும் உண்டாவனவாக. இவ்விடத்தில் நாளது பங்குனி மாதம் 27ஆம் நாள் புதவாரம் இரவில் நான் பொசிக்கின்ற கிரகத்தில் தற்காலம் எசமானனாக விருந்த ராமகிருஷ்ண ரெட்டியா ரென்பவர் வானுலகு அடைந்தார். அவர் சம்மதப்படி அவர் தேகம் சமாதியில் வைக்கப்பட்டது. இந்த சங்கதி தாங்கள் அறிய வேண்டுவது. அன்றியும், நமது நாயக்கரவர்களுக்கும் சுந்தரம்மாளுக்கும் தெரியப்படுத்த வேண்டும். அன்றியும்,

நமது வேலு முதலியார் அவர்களுக்கும் நேரிட்டபோது தெரியப்படுத்த வேண்டும். இதுவன்றியும் சுந்தரம்மாளுக்கும் அத்தானுக்கும் நமது நாயக்கருக்கும் நமது வேலு முதலியாருக்கும் தாங்கள் அவசியம் அறிவிக்கவேண்டுவது ஒன்று. அதாவது சித்திரை வைகாசி இவ்விரண்டு மாதமும் போக ஆனி மாதம் இருபது தேதிக்குமேல் என் தேகம் இருந்தால் அவசியம் சென்னபட்டணம் வருவேன். இது தவறாது. ஆகலில் அதுபரியந்தம் மனம் பொறுத்திருக்க வேண்டு மென்றும் இவர்களுள் சுந்தரம்மாள் அத்தான் இவர்களுக்கு முக்கியம் தெரிவிக்க வேண்டுவது ஒன்று, என்னெனில் மேற்குறித்த ஆனி இருபது தேதி பரியந்தம் பட்டபாட்டை பட்டுக்கொண்டு இருந்தால் அதன்பின் அவர்களுக்கு எந்த எந்த விஷயத்தில் நிற்பந்தங்களோ அவைகளை யெல்லாம் நிவர்த்தி செய்து பிரயாசம் தோன்றாதபடி செய்விக்கலாம் என்று உறுதியாகச் சொல்ல வேண்டும். நமது நாயக்கரவர்களுக்கு சொல்லவேண்டுவது தேகத்தைப் பக்குவமாக அதிக முயற்சியால் வருந்தாமல் நடத்தவேண்டு மென்றும், ஆனி இருபது தேதிக்குமேல் தாங்கள் சமீபத்தில் இருக்கப் பெறலாம் என்றும் சொல்லவேண்டும். நமது வேலு முதலியார் அவர்களுக்கு தற்காலம் தேகம் எந்த பக்குவத்திலிருக்கின்றதோ வென்கிற ஐயுறவோ டிருக்கின்றே னென்று சொல்ல வேண்டும். தாங்கள் தேக முதலிய கருவிகளை சாக்கிரதையாக வைத்திருக்கவேண்டும். அவசியம் தமக்கைக்கும் மேற்படியார்க்கும் கடிதத்தின் வண்ணம் தெரிவிப்பது மன்றி பதில் எழுதவேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

இங்ஙனம்

சி. இராமலிங்கம்.

இஃது

சென்னபட்டணம் பெத்து நாய்க்கன்பேட்டை ஏழுகிணற்றுத் தெருவுக்குக் கீழ் பக்கம் வீராசாமிப் பிள்ளை வீதியில் கலக்டர் கச்சேரி மகாராஜராஜஸ்ரீ சுப்பராயபிள்ளை வீட்டுக்கு எதிர் வீட்டில் மகாராஜராஜஸ்ரீ இரத்தின முதலியார் அவர்களுக்கு.

TRANSLATION – To you, who have risen to the first place among good qualities and shine like the apple of my eye: by Siva's grace may long life and the fulfillment of the wishes of your heart increase more and more. Here, on the night of Wednesday, the 27th of this present month of Panguni, one Ramakrishna Reddiar, who was for the time being the master of the house where I take my meals, passed to the world above. As he had consented, his body was laid in samadhi. This news is for you to know. Also, it must be made known to our Nayakkar and to Sundarammal. Also, it must be made known to our Velu Mudaliar when the occasion comes. Besides this, there is one thing that you must without fail make known to Sundarammal, to your brother-in-law, to our Nayakkar and to our Velu Mudaliar. It is this: when these two months, Chithirai and Vaikasi, have passed, if my body is still here after the twentieth of the month of Aani, I will certainly come to Chennai. This will not fail. So they must bear it patiently until then. And among them there is one thing to be told especially to Sundarammal and your brother-in-law, namely this: tell them firmly that if they go on bearing what they have been bearing until the twentieth of Aani mentioned above, then after that, whatever matters they are hard pressed in, all of them can be removed and set right so that no hardship appears. What must be told to our Nayakkar is that he should carry on the body properly, without straining it with too much effort, and that after the twentieth of Aani he may have me near him. Tell our Velu Mudaliar that I am anxious, not knowing what state his body is in at present. Keep your body and the other faculties with care. Without fail, tell your elder sister and the one named above what this letter says, and also write a reply. Chiranjeevi. Chiranjeevi.

Thus, C. Ramalingam.

This is for Maharajarajasri Rathina Mudaliar, in the house opposite the house of Maharajarajasri Subbaraya Pillai of the

Collector's office, Veerasami Pillai Street, on the east side of Ezhukinaru Street, Pethu Naickenpet, Chennai.

COMMENTARY – To lay the body in samadhi is to bury it, in place of burning it, and Vallalar records that this was done with the dead man's own consent. His promise to come is given with his usual reserve: 'if my body is still here'.

20. A STIRRING OF THE HEART

To Chiranjeevi Rathina Mudaliar. No date (the signature, date and address are torn away)

The editor notes that the parts of this letter that bore the signature, the date and the address are torn away. Vallalar, writing here in the plural 'we', acknowledges a gift brought by C. Dharmalinga Pillai and tells of a preparation made for the sick poor that was spoiled through carelessness.

உ

சிவமயம்

சற்குண சிரோமணியாகி நமது கண்மணி போன்று விளங்கிய சிரஞ்சீவி இரத்ந முதலியார் அவர்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்துஞ் சிவஞானமு மேன்மே லுண்டாவனவாக.

சி. தருமலிங்கப் பிள்ளையின் வசத்திலனுப்புவித்த கழல்க ளீரிரண்டும் பூணப்பெற்றனம்.

சுமார் பதினைந்து தினத்திற்குமுன் யாம் விடுத்த கடிதம் அங்ஙனம் வரப்பெற்றதும் பெறாததும் புலப்பட்டேமின்று. புலப்படுதற்கு அவாவுகின்றோம்.

இனி ஈராண்டு பலவகைக் கருவிகளால் பதப்படுத்தி யேழைகள் பலர்க்கும் உபயோகிக்கும் பொருட்டு நம்மாட்டிருந்த ஓர் பேருழப்பு—ஓர் அசாக்கிரதையால் தன்மை கெடப்பெற்றது. இங்ஙனம் பெறினும் நம் பெருமான் றிருவுளக் குறிப்பு அங்ஙன மிருந்த தென்று கருதி அமைதி

> பெற்றாமாயினும், பிணிகளாற் பிணிப்புண்ட ஏழைகளைக் கருதும்போதெல்லாம் ஒரு சிறிது உளம் புடைபெயர்கின்றாம். ஆகலின் அப் புடைபெயர்ச்சியை இன்னும் இரண்டு மூன்று திங்களி னீக்கப் பெற்று ஆண்டு அவசியம் வருவேம். யாம் வருமளவும் தேக முதலிய கருவிகளைக் கடைக்கணித்து வருக. சிவபிரான் றிருவடித்துணை யன்றி வேறு துணை நமக்கு இன்மையின் அவற்றை இடைவிடாது நினைக. வாழ்க வாழ்க. சிரஞ்சீவி. சிவபெருமான் திருவருட்டுணை மேன்மே லுண்டாக.

TRANSLATION – To Chiranjeevi Rathina Mudaliar, crown jewel of good qualities, who shines like the apple of our eye: by Siva's grace may long life, all prosperity and knowledge of Siva increase more and more.

We have received and put on the two pairs of anklets sent through C. Dharmalinga Pillai.

Whether the letter we sent about fifteen days ago reached you there or not, we have not come to know. We long to know.

Further: a great labor of ours, prepared over two years by various means so as to be of use to many poor people, has lost its virtue through one moment of carelessness. Though this befell us, we took it that the holy will of our Lord was so, and found peace. Yet whenever we think of the poor who are bound by diseases, our heart is a little stirred. So, having that stirring removed within another two or three months, we will certainly come there. Until we come, watch over the body and the other faculties. Since we have no support other than the holy feet of Lord Siva, think of them without a break. May you flourish, may you flourish. Chiranjeevi. May the support of the Divine Grace of Lord Siva increase more and more.

COMMENTARY – Vallalar writes this letter in the plural ‘we’, a dignified form in Tamil letters. The work of two years ‘for many poor people’, spoiled in a moment, seems from his words about the sick to have been a medicine. He accepts the

loss as the Lord's will and still admits that the thought of the sick poor moves him.

21. TRAVELLING WITH FANFARE

To Irukkam Rathina Mudaliar, care of Velu Mudaliar, Royal Hotel, Chennai. 19 May 1864 (Vaikasi 8)

Sent through Velu Mudaliar at the Royal Hotel in Chennai. The letter opens with a verse of blessing and greets the birth of a son to Rathina Mudaliar. Vallalar asks that his coming visit be kept quiet so that it does not turn into a crowded procession.

உ

சிவமயம்

கல்வியிற் கேள்வியிற் கடலினுஞ் சிறந்து

அன்பறி வொழுக்கம் அமைந்தென் னிரண்டு

கண்போன் றென்பாற் கனிவுகொண் டமர்ந்த

குணரத் தினநீ குடும்பத் துடனே

தீர்க்க ஆயுளும் செல்வப் பெருக்கும்

நோயற்ற வாழ்வும் நுவலரும் கீர்த்தியும்

சிவந்திகழ் ஞானமும் சித்தியும் பெற்று

வாழ்க வாழ்க மகிழ்ந்தருட் டுணையால்

வாழ்க வாழ்க வளம்பெற வாழ்க.

தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தாங்கள் வரவிடுத்த கடிதத்தை கண்ணுற்றுக் களித்தேன். அந்தக் கடிதத்தில் தாங்கள் குறித்தபடி இன்னுஞ் சிலகாலத்துக்குள் திருவருள் கூட்டுவிக்கும். இது உண்மை. சந்தேகிக்க வேண்டாம்.

தங்களுக்குப் புத்திரப் பேறு உண்டாயிற்றென்று
கேள்விப்பட்டு அளவு கடந்த சந்தோஷத்தை யடைந்தேன்.
குழந்தையை நன்றாகப் பாராட்டி ... சகல விஷயத்திலுஞ்
சாக்கிரதையா இருக்க வேண்டும். நான் சுமார் அறுபது
தினத்துக்குள் அவ்விடம் வருகிறேன். அல்லது பத்து தினம்
அதிகப்பட்டாலும் அவசியம் வருவேன். நமது அன்பராகிய
மகாராஜராஜஸ்ரீ வேலு முதலியார் ... தற்கு ஆனிமாசம்
பிரயாணப்படுவதாக எழுதியிருக்கிறார்கள். அவர்கள் வந்தால்
என் பிரயாணம் எல்லவர்க்கும் வெளிப்படும்.
வெளிப்பட்டால் அநேகர் என்னுடன் கூடிவர
பிரயாணப்படுவார்கள். ஆரவாரப் பிரயாணமாக முடியும்.
ஆகலில் தாங்களும் அவர்களுக்கு இது விஷயத்தில் தெரிவிக்க
வேண்டும். நான் மாத்திரம் ரகசியமாக வரும்படி
நிச்சயித்திருக்கிறேன். அவசியம் வருவேன். தங்கள் மாமனார்
மகாராஜராஜஸ்ரீ திருவேங்கட முதலியாரவர்களுக்கு ...
அவர்கள் எழுதின கடிதங்களுக்குப் பதில் நான் அவ்விடம்
வந்த பின்பு தெரிவிப்பதாக சொலல் வேண்டும். நமது
நாயக்கரவர்களுக்கும் என் வந்தனம் குறிப்பிக்கவேண்டும்.
வாழ்க.

இங்ஙனம்

வைகாசி 8ஆம் நாள்

சி. இராமலிங்கம்.

இஃது

சென்ன பட்டணம் ராயல் ஓட்டல் மகா ராஜராஜஸ்ரீ வேலு
முதலியா ரவர்கள் மேல் விலாசம் பார்வையிட்டு
ஏழுகிணற்றுக்கடுத்த வீராசாமிப் பிள்ளை வீதியில் தங்கள்
இஷ்டராகிய ரத்தின முதலியார் அவர்களிடம் சேர்ப்பிக்கப்
பிரார்த்திக்கிறேன்.

TRANSLATION – Greater than the ocean in learning and in listening, with love, knowledge and good conduct made complete, dear to me as my two eyes, abiding in tenderness toward me, O Rathina, gem of good qualities, may you with

your family gain long life and a wealth of riches, a life free of illness and fame beyond telling, knowledge that shines with Siva, and attainment; live, live on, rejoicing, with Grace as your support, live, live, live in plenty.

I wish to know news of your welfare often. I read the letter you sent and rejoiced. As you wrote in that letter, Divine Grace will bring it about within a little while. This is true. Do not doubt it.

Hearing that a son has been born to you, I felt joy beyond measure. Cherish the child well ... and be careful in every matter. I am coming there within about sixty days, or even if it is ten days more, I will certainly come. Our friend the respected Velu Mudaliar ... has written that he sets out ... in the month of Aani. If he comes, my journey will become known to everyone. If it becomes known, many will set out to come along with me. It will end as a journey with fanfare. So you too must tell him about this matter. I have decided to come alone and in secret. I will certainly come. Tell your father-in-law, the respected Thiruvengada Mudaliar ... that I will answer the letters he wrote after I come there. Convey my greetings to our Nayakkar too. May you flourish.

Thus, Vaikasi 8 C. Ramalingam.

This: Royal Hotel, Chennai. I pray that Maharajarajasri Velu Mudaliar, on seeing the address on this cover, will have it delivered to your friend Rathina Mudaliar on Veerasami Pillai Street, beside the Ezhukinaru.

COMMENTARY – Rathina means ‘gem’, and the verse plays on the name: guna-rathina, ‘gem of good qualities’. Long life and wealth stand in the same blessing as knowledge shining with Siva.

Vallalar would rather arrive unnoticed than with a following. Aaravaram, the word behind the editor's title, is noise and show, and he guards against it again in RM 29.

22. WHAT COMES EVEN TO HARI, BRAHMA AND THE OTHER GODS

To Chiranjeevi Rathina Mudaliar. No date printed

Undated. The letter opens with Vallalar's verse on who may be called a jnani, then consoles Rathina Mudaliar on the death of Thiruvengada Mudaliar, whom RM 21 names as his father-in-law.

உ

சிவமயம்

மருவாணைப் பெண்ணாக்கி யொருகணத்திற்

கண்விழித்து வயங்கு மப்பெண்

உருவாணை யுருவாக்கி யிறந்தவரை

எழுப்புகின்ற வுறுவ னேனும்

கருவாணை யுறவிரங்கா துயிருடம்பைக்

கடிந்துண்ணும் கருத்த னேலெங்

குருவாணை யெமதுசிவக் கொழுந்தாணை

ஞானியெனக் கூறொ ணாதே. —வாழ்க.

சிரஞ்சீவி

அன்பு அறிவு முதலிய சுபகுணங்களிற் சிறந்த தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சகலசம்பத்தும் மேன்மேல் உண்டாவனவாக. அவ்விடம் இன்னுஞ் சில தினத்தில் அவசியம் நான் வருவேன். வந்த பின்பு தங்கள் வருத்த மெல்லாம் சிவபெருமான் திருவருளால் நிவர்த்தியாய் விசேஷ சௌக்கிய நேரிடும் என்று துணிந்திருங்கள். மகாராஜராஜஸ்ரீ திருவேங்கட முதலியார் காலஞ் சென்றதைக் குறித்து விசாரப்படுகின்றேன். ஆயினும் அது அரிபிரமாதிகளுக்கும்

உள்ள காரியம். ஆதலால் புதிதல்ல வென்று துணிந்தேன். சிவபஞ்சாக்ஷர தியானத்தோடு சாக்கிரதையாக இருங்கள். அஞ்சவேண்டாம். சிரஞ்சீவி.

இங்ஙனம்

சி. இராமலிங்கம்.

மனைவி புத்திரர் முதலானவர்களது க்ஷேமங்களை தெரிவிக்கவேண்டும். தேகத்தைப் பக்குவமாகப் பாராட்டி வரவேண்டும்.

இஃது

சிரஞ்சீவி இரத்தின முதலியாரவர்கள் சமுகத்திற்கு.

வாழ்க வாழ்க.

TRANSLATION – Though he be a sage who in a single instant turns a man into a woman, and with a glance of his eyes makes that shining woman a man again in form, and raises the dead, yet if, without pity, he cuts down a living body and eats it, by our Guru, I swear, by Siva, our tender Flame, I swear, he cannot be called a jnani. May you flourish.

Chiranjeevi

To you, who excel in love, knowledge and the other good qualities: by Siva's grace may long life and all prosperity increase more and more. I will certainly come there in a few more days. Be confident that after I come, all your troubles will be removed by the Divine Grace of Lord Siva and special well-being will come to you. I grieve over the passing of the respected Thiruvengada Mudaliar. Yet that is the lot even of Hari, Brahma and the other gods. So I have made up my mind that it is nothing new. Remain in care, with meditation on the Five Letters of Siva. Do not fear. Chiranjeevi.

Thus, C. Ramalingam.

Let me know how your wife, children and the others are. Look after your body well.

This is for the presence of Chiranjeevi Rathina Mudaliar. May you flourish, may you flourish.

COMMENTARY – Powers such as changing a person's sex or raising the dead count for nothing where there is no compassion. One who kills a living being and eats its body cannot be called a jnani, a knower of the truth, and Vallalar swears it twice, by the Guru and by Siva.

Even the great gods of the Puranas are subject to death, so a death among us is 'nothing new'. The comfort Vallalar offers is the Five Letters, care, and freedom from fear.

23. NO DANGER FOR THOSE WHO SAY SIVAYANAMA

To Irukkam Rathina Mudaliar, care of Velu Mudaliar, Royal Hotel, Chennai. 20 September 1864 (Purattasi 6)

Word had reached Vallalar by post that Rathina Mudaliar was ill with a cough. He answers with a herbal remedy, a promise to set out by Aippasi 12, and the saying about Sivayanama that gives the editor's title.

உ

அன்பு அறிவு ஒழுக்க முதலிய நற்குணங்கள் வாய்ந்து நம்மிடத்து உள்ளன்பு வைத்த சிரஞ்சீவி இரத்தின முதலியார்க்கு சிவகடாக்ஷத்தினால் தீர்க்காயுளும் திடதேகமும் சகல சம்பத்து மேன் மேலுண்டாவனவாக.

தங்கள் சுபசரித்திரங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். தங்களுக்கு இருமலால் தேகம் அபக்குவமாக விருக்கிறதாகத் தபாலில் எனக்குத் தெரிவித்தார். அவர் தெரிவித்தது தொடங்கி என் நினைப்பெல்லாம் தங்களிடமாகவே யிருக்கிறது. நித்திரை பிடிக்கிறதுமில்லை. நான் தொடங்கிய காரியங்கள் ஒன்றும் நடக்கிறதுமில்லை. மனம் அலை பாய்ந்து கொண்டே

யிருக்கிறது. உடனே புறப்படுவேன். இவ்விடத்தில் ஒரு பெரிய தடை நேரிட்டிருக்கின்றது. அது இன்னும் பதினைந்து தினத்தில் விடும். அதற்கு மேல் பிரயாணப்படுகிறேன். எவ்விதத்தினும் ஐப்பசி மாசம் 12ஆம் தேதியில் பிரயாணப் பட்டு வருகிறேன். தாங்கள் நமது சாமி அவர்களைக் கொண்டு உபசாந்தி செய்துக்கொண்டு அதிக உழப்பெடுத்துக் கொள்ளாமல் சாக்கிரதையாக வரவேண்டும். கடினமான அவுஷதங்களைக் கொள்ள வேண்டாம்.

முசுமுசுக்கை சமூலங் கொண்டு வந்து பசும்பாலி லூற வைத்து உலர்த்தி இடித்துச் சூரணமாக வைத்துக்கொண்டு நித்தியம் காலையில் தேயிலைத் தண்ணீர் காய்ச்சி சாப்பிடுவது போல சலத்தில் போட்டு சுண்ட வைத்து பசும்பால் சர்க்கரை மிளகுப்பொடி கலந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட்டு வரவேண்டும். இதை சாமிகளுக்குத் தெரிவித்து அவாளைக் கொண்டு செய்வித்து சாப்பிட்டுக் கொண்டு வரவேண்டும். உத்தியோகம் தடையாயிருந்தால் அதை விடுத்து தேகத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள். தேகம் பக்குவமான பின்பு சிவானுக்கிரகத்தால் உத்தியோகம் சம்பாதித்துக் கொள்ளலாம். அது பரியந்தம் கடன் பட்டாவது ஜீவனம் செய்யலாம். அது குறித்து அஞ்ச வேண்டாம். மேற்குறித்தபடி நான் அவசியம் வருகிறேன். நமது மெய்யன்பர் வேலு முதலியார்க்கும் நான் வருவது நிச்சயமென்று குறிக்க வேண்டும். நமது நாயக்கரவர்களுக்கும் அப்படியே. இந்தக் கடிதம் கண்டவுடன் தங்கள் தேக நிலையை தபாலில் தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் என் மனம் சஞ்சலித்துக் கொண்டே யிருக்கும். ஆகலில் தெரிவிக்க வேண்டும். தாங்கள் 'சிவாயநம வென்று சிந்தித்திருப்பார்க் கபாய மொருநாளு மில்லை' என்பதை சத்தியமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

புரட்டாசி மாதம்

6ஆம் நாள்

தங்கள் அன்பன்

சி. ராமலிங்கன்.

இஃது

சென்னப்பட்டண ராயல் ஓட்டல் மஹாராஜராஜஶ்ரீ முதலியார் வேலு முதலியா ரவர்கள் மேல் விலாசம் பார்வையிட்டு பெத்து நாயக்கன் பேட்டை வீராசாமிப் பிள்ளை தெருவில் மஹாராஜராஜஶ்ரீ இரத்தன முதலியாரவர்களுக்கு சேர்ப்பிக்க வேண்டும். தங்களுக்கும் கடிதம் இதற்குமுன் எழுதி இதனுடன் தபாலில் விடுத்திருக்கிறேன்.

TRANSLATION – To Chiranjeevi Rathina Mudaliar, endowed with love, knowledge, good conduct and the other good qualities, who holds us in heartfelt love: by Siva's gracious glance may long life, a strong body and all prosperity increase more and more.

I wish to hear news of your welfare often. He has let me know by post that your body is unwell because of a cough. From the time he told me, all my thoughts have been with you alone. I cannot sleep. None of the things I have begun goes forward. My mind keeps tossing like a wave. I would set out at once. A great obstacle has arisen here. It will clear in another fifteen days. After that I set out. In any case I will set out on the 12th of the month of Aippasi and come. Have our Swami give you relief, do not take on much strain, and go on with care. Do not take harsh medicines.

Bring the whole musumusukkai plant, root and all, soak it in cow's milk, dry it, pound it and keep it as a powder. Every morning, in the way one boils tea-leaf water and drinks it, put it in water, boil it down, mix in cow's milk, sugar and pepper powder, and take it little by little. Tell this to the Swami, have him prepare it, and keep taking it. If your employment is in the way, leave it and set your body right. Once the body is well, you can earn employment again by Siva's grace. Until then you may live even by borrowing. Do not fear about that. As I wrote above, I will certainly come. Let our true friend Velu Mudaliar know that my coming is certain. The same to our Nayakkar. As soon as you see this

letter, let me know by post how your body is. Otherwise my mind will go on being troubled. So let me know. Hold firmly, as truth, to this: 'For those who dwell in thought on Sivayanama there is no danger, ever.'

Purattasi 6 Yours in love, C. Ramalingan.

This: Royal Hotel, Chennai. Maharajarajasri Mudaliar Velu Mudaliar, on seeing the address on this cover, is to have it delivered to Maharajarajasri Rathina Mudaliar, Veerasami Pillai Street, Pethu Naickenpet. A letter for you too, written before this, I have sent by post with this one.

COMMENTARY – Musumusukkai is a creeper long used in Tamil home medicine for cough. Vallalar puts the body before the job, even at the cost of debt, and closes with a saying he asks his disciple to hold 'as truth': whoever keeps Sivayanama in mind meets no danger.

24. ATTAINING THE ENJOYMENT OF SIVA'S BLISS

To Irukkam Rathina Mudaliar, Pethu Naickenpet, Chennai. 20 April 1865 (Chithirai 10)

Headed Thiru Chitrambalam in place of the usual Sivamayam. Vallalar names meditation on the Five Letters as the one means to the bliss of Siva, adds the duty of living within one's income, and says that two sick people have taken refuge with him.

உ

திருச்சிற்றம்பலம்

சுபம் உண்டாகுக. கல்வி கேள்விகளிற் பயின்று
அன்பறிவொழுக்கங்களிற் சிறந்து அருளொடு
கிளர்ந்தவாக்கத்தி னுயர்ந்து குணமணியாக விளங்கிய
தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுந் திடதேகமும் சகல
சம்பத்தும் மேன்மேல் உண்டாகுக.

தங்களுடைய சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன். அரி பிரமாதிக ளெத்துணையும் பெறுதற்கு அரியதாகிய சிவ சம்பந்தத்தை முன் செய்த தவப் பயனாற் பெற்றனம். அங்ஙனம் பெற்ற நாம் சிவானந்த போக சாத்தியத்தை காலமுண்டாக அடைதல் வேண்டும். அதனை அடைதற்கு சிவபஞ்சாக்ஷர தியானமன்றி வேறு ஏதுக்கள் ஒன்றுமின்று. இஃது திருவருளாணை. என்னின், நாம் செல்லுங் காலமெல்லாம் சித்த சுத்தியோடு சிவபஞ்சாக்ஷர தியானத்தில் சர்வசாக்கிரதையைப் பெற்று வரவிற்கு ஒத்த செலவோடு வாழ்தல் வேண்டும். இஃதே நமது கடமை. இனி இங்ஙனம் இருவர் பிணியாளர் வேறு கதியின்றி என்பாற் புகலடைந்திருக்கின்றனர். அப்பிணி சிறிது சாந்தப்பட்டவுடன் பிரயாணப்பட்டு அவ்விடம் வர நிச்சயித்திருக்கிறேன். சிவபெருமான் திருவுள்ளக் கருத்தறியேன். நமக்குரிய நேயர் முன்னவராகிய மகாராஜராஜஸ்ரீ நாயக்கர் முதலானவர்கட்கும் என் வந்தனங் குறிப்பிக்கவேண்டும். வரதாசாரியா ரவர்கள் தற்காலம் எவ்வித நிலையிலிருக்கின்றனர். அந்நிலையும் தெரிதல் வேண்டும். நேயர் மகாராஜராஜஸ்ரீ கந்தசாமி முதலியார்க்கும் என் வந்தனங் குறிப்பிக்கவேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

சித்திரை மாதம் 10ஆம் நாள்

சி. இராமலிங்கம்

இஃது

சென்னபட்டணம் பெத்துநாயக்கன் பேட்டை ஏழுகிணற்றுக்கு அடுத்த வீராசாமிப் பிள்ளைத் தெருவில் மகாராஜராஜஸ்ரீ முதலியார் இரத்தின முதலியார் அவர்கள் சமுகத்திற்கு.

TRANSLATION – May good come. To you, trained in learning and listening, excelling in love, knowledge and good conduct, risen high in a prosperity that has grown with Grace, and shining as a gem of good qualities: by Siva's grace may long life, a strong body and all prosperity increase more and more.

I wish to hear news of your welfare often. By the fruit of austerities done before, we have gained the bond with Siva, which Hari, Brahma and the other gods find hard to gain by any means. Having gained it, we must reach, while there is time, the enjoyment of Siva's bliss. For reaching it there is no other means at all than meditation on the Five Letters of Siva. This is the command of Divine Grace. That being so, all the time we live we must keep, with a pure mind, full care in meditation on the Five Letters of Siva, and live with spending that matches income. This alone is our duty. Now, here, two sick people with no other refuge have taken shelter with me. As soon as their illness eases a little, I have decided to set out and come there. I do not know what is in the holy mind of Lord Siva. Convey my greetings to the respected Nayakkar, foremost among our friends, and the others. In what state is Varadachariar at present? I must know that too. Convey my greetings also to our friend the respected Kandasami Mudaliar. Chiranjeevi. Chiranjeevi.

Chithirai 10 C. Ramalingam

This is for the presence of Maharajarajasri Mudaliar Rathina Mudaliar, Veerasami Pillai Street, beside the Ezhukinaru, Pethu Naickenpet, Chennai.

COMMENTARY – Siva-sambandham, the bond with Siva, is called rarer than anything Hari and Brahma can win. Vallalar's discipline for keeping it is plain and daily: a pure mind, the Five Letters at every moment, and no spending beyond one's income.

25. THE EXCELLENCE OF THE SOUTH

To Irukkam Rathina Mudaliar, Chennai. No date printed

Undated. Vallalar has heard that Rathina Mudaliar may leave Chennai for a post at Nellore and asks to be told the truth at once. He encloses a letter for Velu Mudaliar and Nayakkar and promises to come to Chennai by Thai or Masi.

உ

சிவமயம்

கல்வி கேள்விகளிற் சிறந்து அன்பு அறிவு ஒழுக்க முதலிய நற்குணங்களை அணியாக அணிந்த சிரஞ்சீவி இரத்ந முதலியா ரவர்களுக்கு சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்தும் மேன்மேலுண்டாவனவாக.

தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். மஹாராஜராஜஸ்ரீ வேலு முதலியார்க்கும் அவர்களிடமாகத் தற்காலத்திருக்கின்ற நாயக்கரவர்களுக்கும் என் வந்தனங் குறிப்பிப்பது மன்றி இக்கடிதத்தினுள் ளடங்கிய கடிதத்தை அவர்களிடத்திற் சேர்ப்பிக்க வேண்டும். இது நிற்க. அவசியம் தெரிந்து கொள்ள வேண்டுவது ஒன்று. என்னெனில் தாங்கள் சென்னப் பட்டணத்தை விட்டு நெல்லூர்க்கு உத்தியோக விஷயமாகப் போகக் கருதி பிரயத்தினஞ் செய்வதாயும் தற்கால அலுவல் தானே நீங்கிவிடுவதாயும் கேள்விப் பட்டேன். கேட்ட நாள் தொடங்கி மனஞ் சஞ்சலித்துக் கொண்டேயிருக்கின்றது. ஆனால் என்ன செய்வது. திருவருள் நடத்த நடக்கின்றோம் என்று சமாதானஞ் செய்துக் கொண்டாலும் என் மனம் அமைதி பெறவில்லை. ஆகலில் அவ்வாறு நேரிடில் முன்னதாக எனக்குத் தெரிவிக்க வேண்டும். நான் கடவுளைப் பிரார்த்திக்கிறதென்னெனில் சென்னப்பட்டணத்தை விடுத்தால் பட்டணத்துக்குத் தென்பாகத்தில் அலுவல் நேரிட வேண்டுமென்று பிரார்த்திக்கிறது தான். என் பிரார்த்தனை திருச்செவிக்கு ஏறுமோ ஏறாதோ தெரிந்ததில்லை. என்ன செய்வேன். எப்படி யானாலும் ஆகட்டும். எனக்கு உடனே பிரயாணத்தின் உண்மை இன்மை தெரிவிக்க வேண்டும். தாங்கள் எழுதிய கடிதம் நாற்பது நாளைக்குமேல் நான் காணப்பெற்றேன். நானும் அவசியம் தை-மாசி-க்குள் அவ்விடம் வரப் பிரயாணஞ் செய்கிறேன். வந்தால் ஒரு மாதம் இரண்டு மாதத்துக்குமேல் அவ்விடத்திலிருக்க சம்மதமில்லை. சிரஞ்சீவி சிரஞ்சீவி.

சி. ராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் மஹா ராஜ ராஜ ஸ்ரீ முதலியார் இரத்தின முதலியா ரவர்கள் திவ்விய சமுகத்திற்கு.

TRANSLATION – To Chiranjeevi Rathina Mudaliar, who excels in learning and listening and wears love, knowledge, good conduct and the other good qualities as ornaments: by Siva's gracious glance may long life and all prosperity increase more and more.

I wish to hear news of your welfare often. Besides conveying my greetings to the respected Velu Mudaliar and to Nayakkar, who is with him at present, deliver to them the letter enclosed in this one. Let that rest. There is one thing I must know without fail. It is this: I have heard that you are making efforts with a mind to leave Chennai and go to Nellore on account of employment, and that your present post is coming to an end of itself. From the day I heard it my mind has been troubled. But what is to be done? Though I console myself that we walk as Divine Grace leads us, my mind finds no rest. So if that should happen, let me know beforehand. What I pray to God is only this, that if you leave Chennai, work should come to you in the country south of the city. Whether my prayer reaches His holy ears or not, I have not come to know. What shall I do? Let it be however it may be. Let me know at once whether the journey is true or not. I received the letter you wrote after more than forty days. I too am certainly setting out to come there by Thai or Masi. If I come, I do not consent to stay there more than a month or two. Chiranjeevi. Chiranjeevi.

C. Ramalingam.

This is for the divine presence of Maharajarajasri Mudaliar Rathina Mudaliar, Chennai.

COMMENTARY – Nellore lies north of Chennai, farther from Vallalar. His prayer that any new post be found south of the

city is a prayer to keep his disciple within reach, and the editor's title takes its name from it.

26. OLD RICE BEFORE A MAN WHO IS NOT HUNGRY

To Irukkam Rathina Mudaliar, Pethu Naickenpet, Chennai. Aadi 23 (no year printed)

Written from Chidambaram on Aadi 23, with no year given. Rathina Mudaliar had sent a book by parcel post, and Vallalar's answer to it gives the editor's title. The letter also tells of Nayakkar's slow recovery after his piles were removed.

சிவமயம்

அருளறி வொழுக்கங்களிற் சிறந்து கல்வி கேள்விகளிற் பயின்று எமது கட்கிமை போன்று விளங்குகின்ற சிரஞ்சீவி ரத்தின முதலியார்க்கு

சிவகடாக்ஷத்தால்

தீர்க்காயுளுந் திடதேகமும் சிந்தித மனோரத சித்தியு மேன்மே லுண்டாவனவாக. தங்கள் சுபசரித்திர விபவங்களும் மகாராஜராஜஸ்ரீ நாயக்கரவர்கள் சுபசரித்திர விபவங்களும் அடிக்கடி கேட்க விருப்ப முள்ளவனாக விருக்கின்றேன்.

தாங்கள் வரவிட்ட பங்கி தபாலி லடங்கிய புத்தகமும் - கடிதமும் முன்னும் பின்னுமாக வரப்பெற்றேன்.

இவற்றுள் பங்கி தபாலி லடங்கிய புத்தகத்தைக் கண்டபோது பசியில்லாதவன் பழஞ்சோறு கண்டாற் போலுங் குறிப்பில்லாதவனாக விருந்தேன். ஏனெனில் திருவருள் சாக்ஷியாகத் திருவடிக் கண்ணன்றி வேறொன்றையும் என் மனம் விரும்புகிறதாகத் தோற்றவில்லை. என்றால் இந்த - பனை ஏட்டையும் அதில் வரைந்த சிறுபிள்ளை விளையாட்டையுந் தானே விரும்பும். விரும்பாது; விரும்பாது. யாரோ தங்களுக்கு வீணாக அலுப்புண்டு பண்ணினார்கள். அது குறித்து வியசனமடைந்தேன். ஆனால் அந்த வியசனத்தை உடனே தங்கள் கடிதத்தைக் கண்டு மாற்றிக் கொண்டேன்.

எப்படி யென்றால் தங்களுடைய க்ஷேமமும் நாயக்கரவர்களுடைய க்ஷேமமும் தெரியவில்லையே யென்று உள்ளபடி எண்ணமிட்டிருந்தேன். அந்த எண்ணத்தை மாற்றி மேற்படி இருவரது க்ஷேமங்களும் அந்தக் கடிதத்தில் குறித்திருந்த படியாலே விசேஷம் சந்தோஷம் உண்டு பண்ணியது. மகாராஜராஜஸ்ரீ நாயக்கரவர்கள் முளைமூலம் எடுத்துக்கொண்டு இப்போதுதான் உடம்பு பக்குவமாகி வருகின்றது என்றபடி இன்னும் தாங்கள் அவர் தேகம் சரியான பக்குவத்தை யடையும் வண்ணம் பாராட்டி வரவேண்டும். தங்கள் தேக முதலிய கருவிகளையும் சாக்கிரதையாகப் பார்த்துப் பாராட்டிக்கொண்டு வரவேண்டும்.

நாயக்கரவர்களுக்கு தெரிவிப்பது. எந்த விதத்திலும் இன்னும் நாலைந்து மாசத்துக்குள் சமீபத்திலிருக்கும்படி சிவகடாக்ஷ நேரிடும். சந்தேகிக்க வேண்டுவதில்லை. அது பரியந்தம் பொறுத்திருக்க வேண்டுமென்று தெரிவிப்பது தான். இதுவல்லாமலும் தங்களுக்கு நான் தெரிவிப்பது ஒன்று. என்னெனில் நான் எந்தப் பிறப்பிலும் தங்களை விடமாட்டேன். தாங்களும் இன்னும் சில நாள்களுக்குள் சமீபத்தி லிருக்கும்படியாகவே சிவானுக்கிரகத்தால் பார்ப்பேன். உண்மை உண்மை. மகாராஜராஜஸ்ரீ நமது உள்ளன்பர் வேலு முதலியார்க்கும் ஸ்ரீ சிதம்பர சாமிக்கும் வந்தனம்.

வேணும் சிரஞ்சீவி.

ஆடி மாதம் 23ஆம் நாள்

இங்ஙனம்

சிதம்பரம்

இராமலிங்கம்

இஃது

சென்னபட்டணம் பெத்துநாயக்கன் பேட்டை ஏழு கிணற்றுத் தெருவுக்குக் கீழ்ப்பக்கம் வீராசாமிப் பிள்ளை வீதியில் கலக்டர்

> கச்சேரி மகாராஜராஜஶ்ரீ சுப்பராய பிள்ளை வீட்டுக்கு எதிர்வீடு மஹாராஜராஜஶ்ரீ ரத்தின முதலியார் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு.
>
> சுபமுண்டாக

TRANSLATION – To Chiranjeevi Rathina Mudaliar, who excels in grace, knowledge and good conduct, is trained in learning and listening, and shines like the eyelid of our eye:

by Siva's gracious glance

may long life, a strong body and the fulfillment of the wishes of your heart increase more and more. I am one who wishes to hear often news of your welfare and news of the welfare of the respected Nayakkar.

I have received, one after the other, the book packed in the parcel post that you sent, and the letter.

Of these, when I saw the book packed in the parcel post, I was without interest, like a man with no hunger who sees old rice. For, with Divine Grace as my witness, my mind does not seem to desire anything other than the holy feet. That being so, would it desire this palm leaf and the child's play written on it? It will not; it will not. Someone has put you to useless trouble. I was sorry about that. But I changed that sorrow at once on seeing your letter. How? I had truly been worrying that I did not know how you were or how Nayakkar was. Since that letter told of the welfare of both of you, it changed that thought and gave me special joy. As the respected Nayakkar has had his piles removed and his body is only now recovering, you must go on looking after him so that his body comes to proper health. Look after your own body and the other faculties too, with care.

This is to be told to Nayakkar: in any case, within four or five more months, by Siva's gracious glance, it will come about that he is near me. There is no need to doubt. Only tell him

to be patient until then. Besides this, there is one thing I tell you. It is this: in no birth will I let you go. You too, by Siva's grace, I will see near me within a few more days. True, true. Greetings to the respected Velu Mudaliar, our dear friend at heart, and to Sri Chidambara Swami.

This I ask. Chiranjeevi. Aadi 23 Thus, Chidambaram
Ramalingam

This is for the divine presence of Maharajarajasri Rathina Mudaliar, in the house opposite the house of Maharajarajasri Subbaraya Pillai of the Collector's office, Veerasami Pillai Street, on the east side of Ezhukinaru Street, Pethu Naickenpet, Chennai. May all be well.

COMMENTARY – Pazhanchoru is cooked rice kept overnight in water, the plainest of meals, and a man who is not hungry does not look at it twice. So it was with the book, however carefully sent. What Vallalar's mind wants is the holy feet, and he calls the rest ‘child's play’.

‘In no birth will I let you go’ is among the most personal sentences in these letters, and Vallalar seals it with ‘True, true’.

27. WHAT THE LORD WITHIN MADE HIM SING

To Irukkam Rathina Mudaliar, English School Master, Pethu Naickenpet, Chennai. No date printed

Undated, from Chidambaram, and addressed to Rathina Mudaliar as ‘English School Master’. It answers his registered letter of 13 November 1865, allowing him or Selvaraya Mudaliar to do as he proposed, with only the songs the Lord sang through Vallalar from within.

உ

சிவமயம்

அன்பறி வாசாரங்களிற் சிறந்து சிவபத்தியினுஞ்
ஜீவகாருண்யத்தினுந் தலைநின் றெம துள்ளத்திற் கலந்து
விளங்கிய தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுஞ் சகல
சம்பத்து மேன்மேலுண்டாக.

1865 நவம்பர் மாதம் 13ஆம் தேதி ரிஜிஸ்டர் செய்தனுப்பிய
தங்கள் கடிதத்தைக் கண்ணுற் றறிந்து கொண்டேன்.

அக்கடிதத்திற் குறித்த விஷயம் எனக்கத்துணை
யவசியமின்றாயினுந் தங்கள் கருத்தின்படி இறைவ
னென்னுள்ளிருந்து பாடுவித்தவைகளை மாத்திரம்
தாங்களாயினும் மகாராஜராஜஸ்ரீ செல்வராய
முதலியாரவர்களாயினும் தாங்கள் வரைந்தபடி
செய்துக்கொள்ளலாம். இனி எழுதுவதற்கு சமயமின்று.
ஆகலின் இங்ஙனம் அமைதி செய்தாம்.

சுமார் இருபது தினஞ் சென்ற பின்னர் சமய முண்டாம். ஆண்டு
வரைவன வரைதும், சிரஞ்சீவி சிரஞ்சீவி. சிவ சிவ

இங்ஙனம்

சிதம்பரம்

இராமலிங்கம்.

இ்ஃது

சென்னபட்டணம் பெத்துநாயக்கன் பேட்டை
ஏழுகிணற்றுக்கடுத்த வீராசாமி பிள்ளை வீதியில் இங்கிலிஷ்
இஸ்கூல் மாஸ்டர் மஹாராஜராஜஸ்ரீ இரத்தன
முதலியாரவர்கள் சமுகத்துக்கு

TRANSLATION – To you, who excel in love, knowledge and right conduct, who stand foremost in devotion to Siva and in Jeevakarunyam, and who shine mingled within our heart: by Siva's grace may long life and all prosperity increase more and more.

I have read and taken in your letter, which you registered and sent on the 13th of November 1865.

Although the matter written in that letter is not so necessary to me, yet, as you wish, you or the respected Selvaraya Mudaliar may do as you have written, with only those songs which the Lord, dwelling within me, made me sing. There is no time now to write more. So I have settled the matter in this way.

There will be time after about twenty days. Then I will write what is to be written. Chiranjeevi. Chiranjeevi. Siva Siva.

Thus, Chidambaram Ramalingam.

This is for the presence of Maharajarajasri Rathina Mudaliar, English School Master, Veerasami Pillai Street, beside the Ezhukinaru, Pethu Naickenpet, Chennai.

COMMENTARY – The editor's title comes from this sentence. Only what 'the Lord, dwelling within me, made me sing' is to be used, and Vallalar says the matter is not so necessary to him. Later letters in this series, RM 28, 29 and 34, deal with printing his songs.

28. THE PRINTING OF THIRU ARUTPA

To Irukkam Rathina Mudaliar, care of Velu Mudaliar, Royal Hotel, Chennai. No date printed

Undated, from Chidambaram. Vallalar has heard that the Ottiyur songs are about to be printed and asks that they wait until he can add more songs he has with him, which gives the editor's title. A postscript is meant for Rathina Mudaliar and Velu Mudaliar alone.

உ

கல்வி கேள்விகளாலும் அன்பறி வொழுக்கங்களாலுஞ் சிறந்த தங்கட்கு சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளுஞ் சகல சம்பத்து மேன்மேல் உண்டாக.

தாங்க ளனுப்பிய பங்கிக் கட்டும் தபாலும் வந்து சேர்ந்தன. தாங்கள் சிவத்தியான சகிதராய் வரவுக்குத் தக்க செலவு செய்து கொண்டு தேகத்திற்கு திடமுண்டாகும்படி உபசரித்துக்கொண்டு சாக்கிரதையோ டிருக்கவேண்டும். படிப்பிக்கிற விஷயத்தில் அதிக அதிக்கிரம பிரயாசை எடுத்துக் கொள்ளப் படாது. தங்களுக்கு இருக்குங் கடனைக் குறித்து அணுவளவும் அஞ்சப்படாது. நான் வைகாசி மாதக் கடைசியில் அவசியம் அவ்விடம் வருகிறேன். இது நிச்சயம். இவ்விடத்தில் நாயக்கர் க்ஷேமமாக இருக்கிறார். ஆயினும் அவர்க்கு இவ்விடத்திலும் நிம்மதியில்லை, அன்றி ஒற்றியூர் பாடல்களையும் மற்றவைகளையும் அச்சிடத் தொடங்குகிறதாய்க் கேள்விப்படுகிறேன். அவைகளை தற்காலம் நிறுத்தி வைத்தால் நான் அவ்விடம் வந்தவுடன் இவ்விடத்தி லிருக்கின்ற இன்னுஞ் சில பாடல்களையுஞ் சேர்த்து அச்சிட்டுக் கொள்ளலாம். பின்பு தங்க ளிஷ்டம். நமது சிநேகிதர் மகாராஜராஜஸ்ரீ வேலு முதலியாரவர்களுக்கு இதைத் தெரியப்படுத்துவீர்களாக. தங்கள் குடும்ப க்ஷேமமும் சுந்தரம்மாள் - புருஷர் - சுந்தரப்பிள்ளை முதலானவர்களுடைய க்ஷேமமும் மற்ற சிநேகர் முதலானோர் க்ஷேமமும் தெரிவிப்பீர்களாக. எனக்கு சாவகாசமில்லாமையால் இம்மட்டில் நிறுத்தினேன். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

சிதம்பரம்

இராமலிங்கம்.

இந்தக் கடிதம் தங்கள் மட்டில் வேலு முதலியார் மட்டில் வழங்க வேண்டும். நாயக்கர் வந்த நாள் தொட்டு தேக அசவுக்கியத்தோடேயிருக்கிறார்கள்.

இஃது

சென்னபட்டணம் ராயல் ஓட்டல் மகாராஜராஜஸ்ரீ வேலு முதலியாரவர்கள் மேல் விலாசம் பார்வையிட்டு ஏழுகிணற்றுக் கடுத்த வீராசாமிப் பிள்ளை தெருவில் மகாராஜராஜஸ்ரீ இரத்தின முதலியார் அவர்களிடஞ் சேர்ப்பிக்க கோருகிறேன்.

TRANSLATION – To you, who excel in learning and listening and in love, knowledge and good conduct: by Siva's grace may long life and all prosperity increase more and more.

The parcel you sent and the letter by post have arrived. Keep to meditation on Siva, spend in keeping with your income, look after your body so that it grows strong, and remain in care. In the matter of teaching you must not take on excessive and overstrained effort. About the debt you have, you must not fear even an atom's worth. I will certainly come there at the end of the month of Vaikasi. This is certain. Here Nayakkar is well. Yet he has no peace here either. Further, I hear that you are beginning to print the Ottiyur songs and the others. If you hold them back for now, then when I come there you can print them together with a few more songs that are here. After that, as you please. Let our friend the respected Velu Mudaliar know this. Let me know how your family is, how Sundarammal, her husband, Sundara Pillai and the others are, and how the other friends are. As I have no leisure, I stop here. Chiranjeevi. Chiranjeevi.

Chidambaram Ramalingam.

This letter is to be shared only between you and Velu Mudaliar. Since the day Nayakkar came, he has been unwell in body.

This: Royal Hotel, Chennai. I ask that Maharajarajasri Velu Mudaliar, on seeing the address on this cover, have it delivered to Maharajarajasri Rathina Mudaliar on Veerasami Pillai Street, beside the Ezhukinaru.

COMMENTARY – Pangi (banghy) post was the parcel post of the time. The Ottiyur songs are those on the Lord of Thiruvottiyur, and Vallalar wants them held back so that the songs he has with him can be printed with them.

The body of the letter says that Nayakkar is well, and the postscript, kept to two friends, says he has been ailing since he came. Vallalar spares the wider circle needless worry.

29. A NAME CLOSE TO FANFARE

To Irukkam Rathina Mudaliar. 28 March 1866 (the year Krodhana, Panguni 17)

From Chidambaram. No envelope is printed with this letter. Vallalar returns songs he has completed, reports about twenty new garlands of songs on Chidambaram, and asks that he no longer be called 'Ramalinga Swami'.

அன்புள்ள தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளுந் திடதேகமும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாக. தாங்கள் வரைந்து விடுத்த கடிதமும் இப்பாடல்களும் இரண்டு தினத்திற்கு முன் என்னிடஞ் சேர்ந்தன. இன்று குறை நிரம்பப் பெற்றன கொள்க. அன்றி, நான் இத்திசைக்கண் வந்தபின் இங்ஙனமிருந்து தங்களிடத்திற் போந்த சில பாடல்களில் ஒன்றும் வெளிப்படாதிருத்தல் வேண்டும். என்னையெனில் நான் இங்ஙனம் வந்த பின்னர் சிதம்பர விஷயத்தில் தோத்திர மாலைகளுஞ் சாத்திர மாலைகளுமாக சுமார் 20 மாலைகள் செய்யப்பட் டிருக்கின்றன. அவைகள் வெளிப்படும்போது வெளிப்படுத்திக் கொள்ளலாம். இது நிற்க. முன்னோர் கடிதத்தினான் குறித்த பாயிரத்தை இன்னுஞ் சில தினஞ் சென்ற பின்னர் அனுப்புகிறேன், தற்காலம் என்னினைவு விரிதற்கின்மையால். தாங்கள் தேகத்தை சாக்கிரதையாகப் பாராட்டிக் கொண்டு வரவேண்டும். நமது அன்பர் மகாராஜராஜஶ்ரீ வேலு முதலியார் மகாராஜராஜஶ்ரீ செல்வராய முதலியார் முதலானவர்களுக்கும் நான் அவசியம் இரண்டு மாதத்தில் அவ்விடம் வருவதாக குறிப்பித்தல் வேண்டும். மகாராஜராஜஶ்ரீ நாயக்கர் சாமிக்கு பித்த விசேஷத்தால் சிறிது குணம் விகற்பித்து அடிக்கடி சொல்லாமற் போவதும் பின்பு வருவதுமாகவிருக்கின்றார். இது நிற்க. தெ. ஆறுமுகப்பிள்ளை யவர்களுக்குஞ் சுந்தரம்மாளுக்கும் இன்னும் ஒரு மாதஞ் சென்ற பின்னர் நான் சொன்னபடி செய்விப்பதாக தெரியப்படுத்த வேண்டும். அன்றியும் சௌ. விசாலாக்ஷி யம்மையும் அவர் புருஷனும் இவ்விடத்தில் நேர்ந்த சொல்ப

வரும்படி போதாமை யென்று சுமார் 20 நாள்களுக்கு முன்னரே இவ்விடம் பிரயாணப்பட்டு அவ்விடம் வந்தார்கள். இது நிற்க.

இராமலிங்கசாமி யென்று வழங்குவிப்பது என் சம்மதமன்று. என்னை - ஆரவாரத்திற்கு அடுத்த பெயராகத் தோன்றுதலில். இனி அங்ஙனம் வழங்காமை வேண்டும்.

ஜீவகாருண்ணியமும் சிவானுபவமும் அன்றி மற்றவைகளை மனத்தின்கண் மதியாதிருத்தல் வேண்டும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

குரோதன வருஷம்

பங்குனி மாதம் 17ஆம் நாள்

இங்ஙனம்

சிதம்பரம்

இராமலிங்கம்.

TRANSLATION – To you, who are full of love: by Siva's gracious glance may long life, a strong body and all prosperity increase more and more. The letter you wrote and sent, and these songs, reached me two days ago. Take them, made complete today where they were lacking. Further, of the few songs that went to you from here after I came to these parts, not one should be made public. Why? Since I came here, about 20 garlands of songs on Chidambaram have been made, garlands of praise and garlands of teaching. They may be made public when those come out. Let that rest. The preface mentioned in an earlier letter I will send after a few more days, since at present my thought has no room to open out. Look after your body with care. Let our friends the respected Velu Mudaliar, the respected Selvaraya Mudaliar and the others know that I will certainly come there in two months. The respected Nayakkar Swami, from an excess of bile, is somewhat changed in temper; he often goes off without a word and then comes back. Let that rest. Let T.

Arumuga Pillai and Sundarammal know that after another month has passed I will have done what I said. Also, Sow. Visalakshi Ammai and her husband, saying that the small income they found here was not enough, left here about 20 days ago and have come there. Let that rest.

I do not consent to my being called 'Ramalinga Swami'. Why? Because it seems to me a name that goes with fanfare. From now on it must not be used.

Apart from Jeevakarunyam and the experience of Siva, you must hold nothing else in esteem in your mind. Chiranjeevi. Chiranjeevi.

The year Krodhana Panguni 17 Thus, Chidambaram Ramalingam.

COMMENTARY – A malai, 'garland', is a cycle of songs, and Vallalar names two kinds, songs of praise and songs of teaching. He wants the scattered songs held back until the Chidambaram garlands can appear.

Vallalar refuses the title Swami for himself. Aaravaram is noise and show, and he will not have his name carry it.

Jeevakarunyam is compassion for every living being. With the experience of Siva it is the whole of what Vallalar asks his disciple to value.

30. RELIEVING THE HUNGER OF THE HUNGRY IS THE GREATEST DEED

To Irukkam Rathina Mudaliar, care of Velu Mudaliar, Royal Hotel, Chennai. 19 April 1866 (the year Akshaya, Chithirai 8)

From Chidambaram. Vallalar explains why he will not travel in the hot season on money meant for feeding the hungry, names four works he plans to write, and speaks with humor of Nayakkar, the 'Pittha Swami'.

௨

அருட் குணங்களனைத்து மமைந்தென் னற்றுணையாய்
விளங்கிய தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளுந்
திடதேகமும் சகல சம்பத்து மேன்மேல் விளைக. வரைந்து
விடுத்த நல் வாசகத்தைக் கண்ணுற் றறிந்தனன். குடும்ப
கோடம், பொது வேதம், மெய்ம் மொழிப் பொருள் விளக்கம்,
சன்மார்க்க விளக்கம் என்பவைகளை நூதனமாக ஏற்படுத்தக்
கருதியபடி வரையாக் கடிதப் புத்தகம் மூன் றென்னிடத்
திருக்கின்றன. அவை அமையும். ஆகலில் அது
விடயத்திலுழத்தல் வேண்டா. நான் வருமதிக் கடையில்
அங்ஙனம் போதுதற் குளங்கொண் டிருக்கின்றனன். இஃ
துபாய மன்றுண்மை. அருநெறி செல்வோர்க்கு மச்சுறுத்தத்
தக்க விவ்வெய்ய பருவத்தின்கண் வான் பெயலறியா
வன்னெறிப்பட்டு மெய்வருத்தங் கோட லொன்றோ.
எவ்வகையானுங் களைகணின்றிப் பசித்தாரது பசி நீக்குதற்
பொருட்டே திருவருளாற் கிடைக்கும் பொருட் கருவியை
அங்ஙனஞ் செலுத்தலின்றி யிங்ஙனஞ் செலுத்தும் வெறுஞ்
செயற்பாட்டிற் கொருப்படுங் குறைமையுங் கோடற்
கிடனாம். ஆகலில் இது விடயத்திற் றுணிந்துரைத்தற்குச்
சித்தமுநாவுஞ் செல்வன வல்ல. முன் குறித்தபடி வரற்குத்
தடைநேரின் அன்று துணிந்து வரைவல். இஃதென் கருத்து.
பின்னர் தங்கள் கருத்தின்படி செய்க. இஃதுலகியற் பிழைத்த
சிலர்க்கு வரைதல்போல் வரைந்த தன்று. உள்ளமொத்து
வரைந்ததென்க. இதனை நமது உள்ளன்பர் செல்வராய
முதலியா ரவர்கட்குங் குறிக்க. என்னையன்றித் தன்னையுங்
கருதார் அன்றிப் பொன்னையுங் கருதார் என்று கருதப்படு
மன்பர் வேலு முதலியார்க்கு ஓர் உத்தர கடிதம் வரைந்தனன்.
தாங்கள் எனக்கு இருமையும் தொடர்ந்த துணைவராக
நினைக்கின்றேன். அன்றி வேறென்னை நினைப்பேன்.
தங்களுக் கன்றியும் நமது செல்வராய முதலியாரவர்களுக்கும்
கடனிருந்தால் திருவருளால் நீங்கிவிடும். அது குறித்துச் சலிக்க
வேண்டாவென்று குறிக்க. நாயக்கர்சாமி யென்பவர் தற்கால
மிவ்வுலகி லிருக்கின்ற தான்றோன்றிச் சாமிகளிற் றலைநின்ற
சாமி யென்க. என்னை - அறிய வேண்டுவனவற்றை யறிய
முயலாமையோடு பித்த மயக்கான் மனஞ் சென்ற வழி சென்று
பித்தச்சாமி யென்னும் விசேடப் பேர் ஒன்று மிகையாகக்
கொண்டிருக்கின்றனர். ஆகலில் சூழும் வண்ணஞ் சூழ்க.
அன்றி சிவ சிந்தனையுஞ் ஜீவ கருணையுங் கைவிடாது ஓங்குக.

வேறு விடயங்களைச் சந்தி செய்யும் பந்த சந்தி சத்தியாலே மாறாது விழித்திருக்க. சுபம் பெறுக.

அக்ஷய வருடம்

சித்திரை மாதம் 8ஆம் நாள்

இங்ஙனம்

சிதம்பரம்

இராமலிங்கம்.

இஃது

சென்னபட்டணம் ராயல் ஓட்டல் மஹாராஜராஜஸ்ரீ வேலு முதலியா ரவர்கள் மேல்விலாசம் பார்வையிட்டு ஏழுகிணற்றுக் கடுத்த வீராசாமிப் பிள்ளை வீதியில் மஹாராஜராஜஸ்ரீ இரத்தின முதலியா ரவர்கள் சமுகத்திற்கு தயவு செய்விக்க. சுபம்.

TRANSLATION – To you, in whom all gracious qualities are found and who shine as my good companion: by Siva's gracious glance may long life, a strong body and all prosperity grow more and more. I have read and taken in the good words you wrote and sent. For the works I mean to set down anew, Kudumba Kodam, Pothu Vedam, Meymmozhi Porul Vilakkam and Sanmarkka Vilakkam, I have with me three blank paper books, as I had planned. They will do. So do not trouble yourself in that matter. I have it in mind to come there at the end of the coming month. This is no pretext; it is the truth. In this fierce season, which can frighten even those who walk the hard path, is the bodily suffering of a harsh road that knows no rain the only thing? It would also give room for the fault of consenting to an empty undertaking, spending in this way, on myself, the means that Divine Grace provides solely for removing the hunger of the hungry who have no support of any kind,

instead of spending it in that way. So neither my mind nor my tongue goes forward to speak decisively in this matter. If something should prevent my coming as I said before, I will write decisively on that day. This is my view. After that, do as you think fit. This is not written as one writes to some, with worldly pretence. Know that it is written with a heart at one with yours. Mention this also to our dear friend Selvaraya Mudaliar. I have written a letter in reply to our friend Velu Mudaliar, who is held to be one who, apart from me, thinks neither of himself nor of gold. I think of you as my companion joined to me in both worlds. What else would I think? If there are debts, yours and also those of our Selvaraya Mudaliar, they will go by Divine Grace. Tell him not to be troubled about them. Know that the one called Nayakkar Swami is the foremost Swami among the self-made swamis now in this world. Why? Not trying to know what must be known, and going wherever his mind goes in the bewilderment of bile, he has taken on, in excess, a special name, 'Pittha Swami'. So weigh things as you think fit. And rise high, never letting go of the thought of Siva and compassion for living beings. Keep awake, unchanged, against the binding force that draws you into contact with other matters. May all good be yours.

The year Akshaya Chithirai 8 Thus, Chidambaram Ramalingam.

This: Royal Hotel, Chennai. Let Maharajarajasri Velu Mudaliar, on seeing the address on this cover, kindly have it delivered to the presence of Maharajarajasri Rathina Mudaliar, Veerasami Pillai Street, beside the Ezhukinaru. All good.

COMMENTARY – The editor's title comes from the middle of the letter. Money that Grace sends for the hungry who have no other support is not to be spent on travel in the fierce dry season. Pittam is bile and a pitthan is a madman, so 'Pittha

Swami' is an affectionate joke about Nayakkar, whose bile-driven wandering RM 29 also mentions. The four works named here reappear in the list of RM 35.

31. THE AFFAIRS OF MANY PEOPLE

To Irukkam Rathina Mudaliar, Pethu Naickenpet, Chennai. 11 June 1866 (the year Akshaya, Vaikasi 30)

Written, as the letter itself says, from Cuddalore. The editor notes that the parts of the original bearing the opening marks and the signature were cut out for worship, and the print shows gaps in the text. Vallalar asks for a monthly allowance for the Periya Puranam expounder who carries the letter.

உ

சிவமயம்

கல்வி கேள்வி அன்பு அறிவு ஒழுக்கந் தயை முதலியவற்றாற் சிறந்து எனக்கோர் துணையாய் விளங்கிய தங்கட்கு குரு கடாக்ஷத்தால் தீர்க்காயுளுந் திடதேகமும் சகல சம்பத்து மேன்மேலுண்டாக.

தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன்.

இந்தக் கடித முன்னிலையால் தங்களைக் காணுகின்ற பெரியபுராணீகர்க்கு சுமார் 4 மாத பரியந்தம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 4 தாங்கள் கடன் வாங்குகின்ற இடங்களில் வாங்கி மாத மாதம் கொடு ... ... வேண்டும். இவ் ..... வாங்கிக் கொடுத்தனு ... அவர் கையில் பணமிருந்தால் விரைவில் செலவழிந்து போம். அது தங்களுக்குந் தெரியும். இந்தக் காலம் மிகவும் உஷ்ணகாலமாக விருத்தலால் தாங்கள் தேகத்தை சாக்கிரதையாகப் பாராட்டிக்கொண்டு வரவேண்டும். இந்த பெரியபுராணீகர் தற்காலம் உடம்பு அபக்குவராக வருகின்றார். தாங்கள் கடிதம் எழுதக் குறிக்கும்போது இவர் தரத்தையுங் குறிக்கவேண்டும். எனக்குத் தற்காலம் பலர் பலர் விவகார

முதலியவற்றால் உடம்பு அபக்குவமாக விருக்கின்றது. நான் கூடலூரி லிருக்கின்றேன்.

அக்ஷய வருஷம்

வைகாசி மாதம் 30ஆம் நாள்

சிதம்பரம்

இராமலிங்கம்

நான் அவ்விடம் வருகின்ற காலம் சமீபத்தில் குறிக்கின்றேன்.

இஃது

சென்னப்பட்டணம் பெத்து நாய்க்கன் பேட்டை ஏழு கிணற்றுக்கு அடுத்த வீராசாமிப் பிள்ளை வீதியில் மஹாராஜராஜஸ்ரீ முதலியார் ரத்தன முதலியா ரவர்கள் திவ்விய சமுகத்துக்கு, நன்மை.

TRANSLATION – To you, who excel in learning, listening, love, knowledge, good conduct, compassion and the rest, and who shine as a companion to me: by the Guru's gracious glance may long life, a strong body and all prosperity increase more and more.

I wish to hear news of your welfare often.

To the Periya Puranam expounder who comes to see you with this letter, borrow 4 rupees a month for about 4 months from the places where you borrow, and give it to him month by month ... ... must. This ..... obtain and give ... If he has the money in his hand, it will soon be spent. You know that too. As this is a very hot season, look after your body with care. This Periya Puranam expounder is in poor health just now. When you write to me, let me know how he is too. Just now my body is unwell because of the affairs of many, many people and the like. I am at Cuddalore.

The year Akshaya Vaikasi 30 Chidambaram Ramalingam

I will let you know shortly when I am coming there.

This is for the divine presence of Maharajarajasri Mudaliar Rathina Mudaliar, Veerasami Pillai Street, beside the Ezhukinaru, Pethu Naickenpet, Chennai. Good wishes.

COMMENTARY – A Periya Puranikar reads and expounds the Periya Puranam, the lives of the Saiva saints, before an audience. Vallalar has the money paid month by month because a lump sum in this man's hands would soon be gone, and he asks that it be borrowed for him if need be.

32. UNSETTLED TIMES

To Irukkam Rathina Mudaliar, care of Velu Mudaliar, Royal Hotel, Chennai. 22 July 1866 (Aadi 8)

From Chidambaram. Vallalar apologizes for a late reply, which he blames on the unsettled times, asks Rathina Mudaliar to go on supporting the Periya Puranam expounder, and repeats his plan to visit Chennai within two months.

உ

சிவமயம்

அன்பு அருள் அறிவு முதலியவற்றாற் சிறந்து தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளும் திடதேகமும் சகல சம்பத்து மேன்மேலுண்டாக வென்று பிரார்த்திக்கிறேன்.

தங்கள் தேக விஷயத்தில் அதிகமாக சாக்கிரதையாக சிவத்தியானத்தை விடாமல் வரவுக்குத் தக்கபடி நடக்கவேண்டுமென்று மிகவும் கோருகிறேன்.

முன்னர் நான் பெரிய புராணீகர் விஷயத்தில் எழுதின கடிதத்திற்குப் பதில் தாங்கள் எழுதின கடிதம் வந்து சேர்ந்தது. ஆயினும் என்மனம் இக் கால விகற்பத்தால் விகற்பித்துக் கொண்டிருப்பதால் உடனே பதில் தெரிவிப்பதற்குத் தடையாயிற்று. அது குறித்து வேறு நினைக்கவேண்டாம். நான் இன்னும் இரண்டு மாசத்திற்குள் அவசியம் அவ்விடம் வந்து

சுமார் இருபது தினத்திற்குள் பிரயாணப்பட்டுத் திரும்புவதாக நினைத்திருக்கிறேன். அப்போது தங்களுக்குத் தெரிவிக்க வேண்டியவை தெரிவிக்கிறேன். தாங்கள் உடம்பு விஷயத்தில் அதிக சாக்கிரதையும் சமுசார விஷயத்தில் அதிக வண்மையுமுடையவர்களாக விருங்கள். நமது மகாராஜராஜஸ்ரீ செல்வராய முதலியாரவர்களுக்கும் இப்படியே தேக முதலியவற்றில் சாக்கிரதையும் சிவத்தியானத்தை விடாமையும் உள்ளவர்களாக வேண்டுகிறேன். அதையுங் குறிக்கவேண்டும். பெரிய புராணீகர் விஷயத்தில் முன்பு நான் குறித்தபடி இன்னுஞ் சிலகாலம் பிரயாசை எடுத்துக் கொள்ளுங்கள். நான் பின்னே அந்தப் பிரயாசையை மாற்றுகிறேன். சுந்தரம்மாள் அவர் புருஷனார் பெண்கள் முதலானவர்களுக்கும் நான் வருதலைக் குறிப்பிக்கவேண்டும். அன்றி சிரஞ்சீவி நமசிவாயப் பிள்ளை அவ்விடம் வந்திருக்கிறார். அவர்க்குந் தெரியப்படுத்துங்கள். வேலூர் மகாராஜராஜஸ்ரீ வேலு முதலியார் முதலானவர்களுக்கும் மகாராஜராஜஸ்ரீ கந்தசாமி முதலியார் முதலானவர்களுக்கும் அங்ஙனமே குறிக்கவேண்டும். எழுதுவதற்குத் தருணமல்லாத மனத்தொடும் இதை எழுதினேன். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

ஆடி மாதம் 8ஆம் நாள்

இங்ஙனம்

சிதம்பரம்

இராமலிங்கம்.

சி. நமசிவாயப் பிள்ளைக்கு பதில் இன்னுஞ் சில தினத்தில் தெரிவிக்கிறதாகக் குறிக்கவேண்டும்.

இஃது

சென்னப்பட்டணம் ராயல்ஓட்டல் மகாராஜராஜஸ்ரீ முதலியார் வேலு முதலியார் அவர்கள் மேல் விலாசம் பார்வையிட்டு ஏழு கிணற்றுக் கடுத்த வீதியிலிருக்கும் மகாராஜராஜஸ்ரீ இரத்தின முதலியார் அவர்களுக்கு சேர்ப்பிக்க வேண்டும். இதனுடன் தங்களுக்கும் ஒரு கடிதம் எழுதி தபாலில் போட்டிருக்கின்றது.

சுபம் சுபம்.

TRANSLATION – I pray that to you, who excel in love, grace, knowledge and the rest, long life, a strong body and all prosperity may increase more and more by Siva's gracious glance.

I earnestly ask that you take more than usual care in the matter of your body, not give up meditation on Siva, and live in keeping with your income.

The letter you wrote in reply to the letter I wrote earlier about the Periya Puranam expounder has arrived. But since my mind has been wavering with the unsettledness of these times, that kept me from replying at once. Do not think anything else of it. I intend to come there within two more months without fail, and to set out back within about twenty days. Then I will tell you what I have to tell you. Be very careful in the matter of your body and very generous in household matters. I ask that our respected Selvaraya Mudaliar likewise take care of his body and the rest and not give up meditation on Siva. Tell him that too. In the matter of the Periya Puranam expounder, take the trouble for some time more, as I wrote before. Later I will take that trouble off you. Let Sundarammal, her husband, the girls and the others know that I am coming. Also, Chiranjeevi Namasivaya Pillai has come there. Let him know too. Tell the respected Velu Mudaliar of Vellore and the others, and the respected Kandasami Mudaliar and the others, the same. I have written this with a mind not in a state for writing. Chiranjeevi. Chiranjeevi.

Aadi 8 Thus, Chidambaram Ramalingam.

Tell C. Namasivaya Pillai that I will send him a reply in a few more days.

This: Royal Hotel, Chennai. Maharajarajasri Mudaliar Velu Mudaliar, on seeing the address on this cover, is to have it

delivered to Maharajarajasri Rathina Mudaliar, who lives in the street beside the Ezhukinaru. With this, a letter has also been written to you and posted. All good. All good.

33. THE ELDER ATTAINS THE ABODE OF SIVA

To Irukkam Rathina Mudaliar, care of Velu Mudaliar, Royal Hotel, Chennai. No date printed

From Chidambaram. The original is damaged, and the print marks lost lines with rows of dots. An elder has died who had wished Vallalar to be near and to be laid in samadhi at Chidambaram, and the surviving lines speak of debts, livelihoods, a birth and a visit planned for Aippasi.

உ

அன்பு அறிவு தயவு கல்வி கேள்வி முதலிய சிறந்த தங்கட்கு சிவ கடாக்ஷத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாக. தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்கவேண்டும்.

பெரியவர் சிவபதம் அடைந்த ... செவ்வாய்க்கிழமை சாயங்காலம் தெரிந்துகொண்டேன். நான் சமீபத்திலிருக்கவும் சிதம்பரத்தில் சமாதி வைக்கவும் அவர்கள் எண்ணியபடி நேரிடாமல் ... விட்டதை ... இது நிற்க.

. . . . .

படத் தொடங்குவார்கள். அதனால் காலமும் செலவும் நீட்டிக்கும். காலமும் வேற்றுமையாக இருக்கின்றது. ஆதலால் சிநேகர் மகாராஜராஜஸ்ரீ வேலு முதலியாருக்கு கடிதம் எழுதி ... அந்தக் கடிதப்படி அவர்கள் நடத்துகின்ற பட்சத்தில், தாங்களும் அன்பர் செல்வராய முதலியார் நாயக்கர் முதலானவர்களும் உடனிருந்து நடத்துவிக்க வேண்டும். நான் ஐப்பசி மாசம் அவ்விடம் வருகிறேன். நான் வருவதற்கு முன்பே வேலு முதலியாரவர்கட்கு தெரிவித்து அவர்கள் வந்த

பின்பு அவர்களுடன் வருவேன். நான் வந்த பின் அவர்களுக்கு நேரிட்டிருக்கிற கடன்... நீங்களும்

. . . . .

கடன் முதலிய சல்லியங்களை ஆண்டவர் விரைவில் நிவர்த்தி செய்வார். தாங்களாவது முதலியாராவது சஞ்சலிக்க வேண்டாம்... வடிவேலுப் பிள்ளை, தாயார், சுந்தரம்மாள், புருஷன் முதலானவர்களுக்கும் இன்னும் இரண்டு மாதத்திற்குள் ஜீவனத்துக்கு இடம் ஏற்படுத்துவார் கடவுள். அவர்களிடம் திடஞ் சொல்லவேண்டும். நமசிவாயப் பிள்ளையை நான் தெரிவிக்குமளவும் அவ்விடந்தானே இருக்கும்படி சொல்லவும். அவன்

. . . . .

பிரசவமான சங்கதி தெரிவிக்கச் சொல்லவும். உடனே தாங்கள் எனக்கு கூடலூருக்கு அவ்விடத்திய சங்கதிகளை தபாலில் தெரிவிக்க வேண்டும்.

சிரஞ்சீவி.

சிதம்பரம் இராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் ராயல் ஓட்டல் மகாராஜராஜஸ்ரீ வேலு முதலியார் அவர்கள் மேல் விலாசம் பார்வையிட்டு ஏழுகிணற்றுக் கடுத்த வீராசாமிப் பிள்ளை தெருவில் மகாராஜராஜஸ்ரீ ரத்தின முதலியார் அவர்களிடம் சேர்ப்பிக்கக் கோருகிறேன்.

TRANSLATION – To you, who excel in love, knowledge, compassion, learning, listening and the rest: by Siva's gracious glance may long life and all prosperity increase more and more. I must hear news of your welfare often.

That the elder attained the abode of Siva ... I learned on Tuesday evening. That it did not come about as he had

intended, that I should be near and that he should be laid in samadhi at Chidambaram ... that ... Let that rest.

. . . . .

... they will begin to suffer. Because of that, both time and expense will drag on. The times, too, are unfavorable. So, writing a letter to our friend the respected Velu Mudaliar ... if he acts according to that letter, you and our friends Selvaraya Mudaliar, Nayakkar and the others must be with him and see it carried through. I am coming there in the month of Aippasi. Before I come I will let Velu Mudaliar know, and after he comes I will come with him. After I come, the debt that has fallen on them ... you too

. . . . .

The Lord will soon remove the thorns of debt and the like. Neither you nor Mudaliar need be troubled ... For Vadivelu Pillai, the mother, Sundarammal, her husband and the others, God will provide a means of livelihood within two more months. You must tell them so firmly. Tell Namasivaya Pillai to stay right there until I send word. He

. . . . .

... tell him to send word that the delivery has taken place. And send me at once, at Cuddalore, the news from there by post.

Chiranjeevi. Chidambaram Ramalingam.

This: Royal Hotel, Chennai. I ask that Maharajarajasri Velu Mudaliar, on seeing the address on this cover, have it delivered to Maharajarajasri Rathina Mudaliar on Veerasami Pillai Street, beside the Ezhukinaru.

COMMENTARY – To 'attain Sivapadam', the abode of Siva, is the reverent Tamil way of saying that a devotee has died. The print does not name the elder, and the dots and gaps mark words lost from the damaged original.

34. THILLAI OF THE SKY-REACHING GROVES

To Irukkam Rathina Mudaliar, Pethu Naickenpet, Chennai, with a note for Velu Mudaliar. 26 November 1866 (the year Akshaya, Karthigai 12)

From Chidambaram. Vallalar allows the songs on Chidambaram to be printed as Rathina Mudaliar had proposed and sends a correction for one line. A note for Velu Mudaliar follows the letter, to be shown him on a day of leisure, and both say that Vallalar waits only for God's word before he travels.

உ

கல்வி கேள்விகளாலு மன்பறி வொழுக்கங்களாலுஞ் சிறந்த தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாக வேண்டும்.

தங்கள் சுபசரித்திரங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். மகாராஜராஜஸ்ரீ அப்பாசாமி செட்டியா ரவர்கட்குத் தாங்கள் வரைந்த கடிதத்திற் குறித்த வண்ணம் சிதம்பர விஷயமான பாடல்களை தங்கள் கருத்தின்படி அச்சிட்டுக் கொள்ளுங்கள். அன்றியும் 'கண்டா யென்றோழி' என்கிற பாடல்களை வைத்திருக்கின்றவர் தற்காலம் சமீபத்திலில்லை. அவர் வந்தவுடன் வாங்கி யனுப்புகிறேன். 'விண்படைத்த பொழிற்றில்லை யம்பலத்தா னெவர்க்கு மேலானா னன்பருள மேவுநடராஜன்' எனல் வேண்டும். இது நிற்க நான் தற்காலம் அவ்விடம் வருவதற்கு சமயமாகத் தோற்றவில்லை. ஆயினும் நமது ... தலைவராகிய கடவுளது திருவுளச் சம்மதிக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். எந்த இரவில் எந்தப் பகலில் திருவுளச் சம்மத வுத்தரம் எனக்குக் கிடைக்கின்றதோ, அந்த இரவில் அந்தப் பகலில் பிரயாணப்படுவதற்கு யாதொரு தடையு மிராது. இரவும் பகலும் இதை நினைத்துக் கடவுளை தியானிக்கின்றேன். அவர் உத்தரத் தடையன்றி வேறு தடை யாதொன்றுமில்லை. தாங்கள் தேக முதலியவற்றில் சாக்கிரதையுடையவராய் சிவத்தியான சகிதராக இருங்கள். அன்றி இ ... லீவில் இவ்விடம் வருவதற்காவது அல்லது மற்ற எவ்விடம் போவதற்காவது எண்ணமிருந்தால் அதை முன்னதாக எனக்குத் தெரிவிப்பீர்களாக. நமது அன்பர்

மகாராஜராஜஸ்ரீ செல்வராய முதலியா ரவர்கட்கும் இதை குறிப்பிக்க வேண்டும். பெங்களூர் மகாராஜராஜஸ்ரீ வேலு முதலியார் தற்காலம் என்ன அலுவலில் இருக்கின்றார். தெரிவிக்கவேண்டும். சுந்தரம்மாளுக்கும் அவர் புருஷனுக்கும் வருமாதத்தில் ஜீவனோபாய விருத்தி உண்டுபண்ணுவிப்பதாகச் சொல்லுங்கள். என்னைக் குறித்த மற்றவர்களுக்கும் அங்ஙனங் குறிப்பீர்களாக. சிரஞ்சீவி சிரஞ்சீவி சிரஞ்சீவி.

இங்ஙனம்

சி. இராமலிங்கம்.

இதனடியில் எழுதுவதை தாங்கள் ஞாயிற்றுக்கிழமை .... யாவது அல்லது ஓய்வு ஏற்படும் எந்த தினத்திலாவது மகாராஜராஜஸ்ரீ வேலு முதலியாரவர்கட்கு காண்பிப்பீர்களாக.

கல்வி கேள்விகளாலும் அன்பறி வொழுக்கங்களாலும் சிறந்த நண்பராகிய மகாராஜராஜஸ்ரீ வேலு முதலியா ரவர்கட்கு வந்தனம். தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேன். தாங்கள் தேக முதலிய கருவிகளை சாக்கிரதையாக நடத்திக்கொண்டு சிவத்தியான சகிதராக இருங்கள். நான் மகாராஜராஜஸ்ரீ ரத்தின முதலியார் அவர்களுக்கு வரைந்த வாசகத்தைப் பாருங்கள். எந்தத் தினத்தில் பிரயாணப்படலா மென்றே இரவும் பகலும் விரைந்து விரைந்து நினைக்கின்றேன். தாங்கள் இந்தப் பக்கம் வரும்படி எண்ணங்கொண்டால் முன் எனக்குத் தெரிவிப்பீர்களாக. எழுதுவதற்கு அசந்தர்ப்பத்தால் இப்படி எழுதினேன். மன்னிப்பீர்களாக. வந்தனம்.

அக்ஷய வருடம்

கார்த்திகை 12ஆம் நாள்

சிதம்பரம்

இராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் பெத்து நாய்க்கன் பேட்டை
ஏழுகிணற்றுக்குக் கீழ்பக்கம் வீராசாமிப் பிள்ளை தெருவில்
மகாராஜராஜஸ்ரீ முதலியார் இரத்தின முதலியா ரவர்களுக்கு
வருவது.

சுபம்.

TRANSLATION – To you, who excel in learning and listening and in love, knowledge and good conduct: by Siva's gracious glance may long life and all prosperity increase more and more.

I wish to hear news of your welfare often. As you wrote in your letter to the respected Appasami Chettiar, print the songs on Chidambaram as you think fit. Also, the person who has the songs 'Kandaay en thozhi' is not nearby at present. As soon as he comes I will get them and send them. It must read: 'Of Thillai, whose groves possess the sky, He of the Hall, above all, Nataraja who abides in the hearts of those who love Him.' Let that rest. It does not seem the time for me to come there just now. Yet I am waiting for the consent of the holy will of God, our ... Master. On whatever night, on whatever day, the word of His holy consent reaches me, on that night, on that day, there will be no hindrance at all to my setting out. Night and day I meditate on God with this in mind. Apart from the hindrance of His word, there is no hindrance of any kind. Take care of your body and the rest, and keep to meditation on Siva. Also, if you have any thought of coming here during this ... leave, or of going anywhere else, let me know beforehand. Tell this also to our friend the respected Selvaraya Mudaliar. What work is the respected Velu Mudaliar of Bangalore doing at present? Let me know. Tell Sundarammal and her husband that I will have an increase in their means of living brought about in the coming

month. Tell the others who ask after me the same. Chiranjeevi. Chiranjeevi. Chiranjeevi.

Thus, C. Ramalingam.

Please show what is written below to the respected Velu Mudaliar on Sunday .... or on whatever day you have leisure.

Greetings to my friend the respected Velu Mudaliar, who excels in learning and listening and in love, knowledge and good conduct. I wish to hear news of your welfare often. Keep the body and the other faculties with care, and remain in meditation on Siva. Read the words I have written to the respected Rathina Mudaliar. Night and day I think, again and again, in haste, only of the day on which I may set out. If you mean to come this way, let me know beforehand. I have written like this because the moment is not suited to writing. Please forgive me. Greetings.

The year Akshaya Karthigai 12 Chidambaram Ramalingam.

This is for Maharajarajasri Mudaliar Rathina Mudaliar, Veerasami Pillai Street, on the east side of the Ezhukinaru, Pethu Naickenpet, Chennai. All good.

COMMENTARY – Thillai is the old name of Chidambaram, and the Hall (Ambalam) is the hall where Nataraja dances. The quoted line is a correction sent for the songs about to be printed. Vallalar will fix no day for travelling himself and waits for the word of God's will.

35. THE WORKS THAT REMAINED

> *To Irukkam Rathina Mudaliar. No date printed*
>
> *Undated, from Chidambaram, with no envelope printed. Vallalar sends writings that Rathina Mudaliar had asked for, written in haste, and a list of forty-three works to be announced as forthcoming.*

அன்பறிவு முதலியவற்றிற் சிறந்த தங்கட்கு சிவகடாக்ஷத்தால் மேன்மேல் சுபம் உண்டாக. தாங்கள் குறித்தபடி வரைந்து அனுப்பினேன். இவை மிகவும் விரைவில் வரையப்பட்டன. ஆகலால் மிகவும் மெதுவில் பார்க்க வேண்டும்.

சிதம்பரம் இராமலிங்கம்.

மற்றைச் சங்கதிகளைப் பின்னிட்டு தெரிவிக்கிறேன். அன்றி, இதில் குறிக்கின்றவைகளை இனி அச்சிடுவதாகக் குறிப்பீர்களாக. அவை —

நடராஜ நிபுணம் - நடராஜ விசித்திரம் - நடராஜ மதுரம் - நடராஜ அலங்காரம் - நடராஜ ஞான நாடகம் - நடராஜ ஆனந்த நாடகம் - சிதம்பர வுபதேசம் - சிற்றம்பல நடனம் - பொன்னம்பல நடனம் - பொது நடனம் - தத்துவ நடனம் - ஆனந்த நடனம் - அதீத நிலை - அருள் விளக்கம் - மெய்ப்பொருள் விளக்கம் - மெய்ம்மொழிப் பொருள் விளக்கம் - சன்மார்க்க விளக்கம் - சாதன விளக்கம் - கலாந்த விளக்கம் - யோகாந்த விளக்கம் - நாதாந்த விளக்கம் - போதாந்த விளக்கம் - வேதாந்த விளக்கம் - சித்தாந்த விளக்கம் - அண்ட விளக்கம் - பிண்ட விளக்கம் - பிரகிருதி விருத்தி - தத்துவ விருத்தி - சுத்த சிவ ராசியம் - பரசிவராசியம் - மந்திரக் கொத்து - மகாவாக்கிய வகை - பொது வேதம் - குடும்ப கோஷம் - இயல்வகை - அளவை வகை - ஞாய வகை - இலக்கண விருத்தி - தர்க்க விருத்தி - தென்மொழி விளக்கம் - வடமொழி விளக்கம் - உலகியல் விளக்கம் - கலைமரபு.

இந்த தபால் வந்தவுடன் சேர்ந்த செய்தி தெரிவிக்கவேண்டும்.

TRANSLATION – To you, who excel in love, knowledge and the rest: by Siva's gracious glance may good increase more and more. I have written them out and sent them as you asked. These were written very quickly. So they must be looked over very slowly.

Chidambaram Ramalingam.

The other matters I will let you know later. Also, please state that the works listed here will be printed hereafter. They are:

Nataraja Nipunam (The Mastery of Nataraja), Nataraja Vichithram (The Wonder of Nataraja), Nataraja Madhuram (The Sweetness of Nataraja), Nataraja Alankaram (The Adornment of Nataraja), Nataraja Jnana Natakam (The Drama of Nataraja's Wisdom), Nataraja Ananda Natakam (The Drama of Nataraja's Bliss), Chidambara Upadesam (The Teaching of Chidambaram), Chitrambala Nadanam (The Dance in the Hall of Wisdom), Ponnambala Nadanam (The Dance in the Golden Hall), Pothu Nadanam (The Universal Dance), Tattuva Nadanam (The Dance of the Tattvas), Ananda Nadanam (The Dance of Bliss), Atheetha Nilai (The State Beyond), Arul Vilakkam (The Light on Grace), Meypporul Vilakkam (The Light on the True Reality), Meymmozhi Porul Vilakkam (The Light on the Meaning of the True Word), Sanmarkka Vilakkam (The Light on Sanmarkkam), Sadhana Vilakkam (The Light on Practice), Kalantha Vilakkam (The Light on Kalanta), Yogantha Vilakkam (The Light on Yoganta), Nadantha Vilakkam (The Light on Nadanta), Bodhantha Vilakkam (The Light on Bodhanta), Vedantha Vilakkam (The Light on Vedanta), Siddhantha Vilakkam (The Light on Siddhanta), Anda Vilakkam (The Light on the Cosmos), Pinda Vilakkam (The Light on the Body), Prakriti Viruthi (A Commentary on Nature), Tattuva Viruthi (A Commentary on the Tattvas), Suddha Siva Rasiyam (The Secret of Pure Siva), Parasiva Rasiyam (The Secret of the Supreme Siva), Mandirak Kothu (A Cluster of Mantras), Mahavakkiya Vagai (The Kinds of Great Sayings), Pothu Vedam (The Universal Veda), Kudumba Kosham (The Household Treasury), Iyal Vagai (The Kinds of Literary Composition), Alavai Vagai (The Kinds of Means of Knowledge), Nyaya Vagai (The Kinds of Logic), Ilakkana Viruthi (A Commentary on Grammar), Tharkka Viruthi (A Commentary on Reasoning), Thenmozhi Vilakkam (The Light on the Southern Language), Vadamozhi Vilakkam (The Light on the Northern Language), Ulakiyal

Vilakkam (The Light on Worldly Life), Kalaimarabu (The Tradition of the Arts).

As soon as this post arrives, let me know that it has reached you.

COMMENTARY – The list names works on Nataraja and the dances of Chidambaram, on Grace and Sanmarkkam and its practice, on the 'ends' (anta) of the different schools, and on language, logic and worldly life. Pothu Vedam, Kudumba Kosham, Meymmozhi Porul Vilakkam and Sanmarkka Vilakkam were already named in RM 30, where Kudumba Kosham is spelled Kudumba Kodam.

36. THE YIELD OF GOLD

To Irukkam Rathina Mudaliar, No. 38 Veerasami Pillai Street, Chennai. 3 May 1868 (the year Vibhava, Chithirai 23)

From Chidambaram, with an envelope marked as stamped and addressed to No. 38 Veerasami Pillai Street. Vallalar asks for touchstones for gold and silver, a bag for them and a balance, and forbids the letter to be read out to anyone outside the Samarasa Veda Sanmarkka Sangam.

உ

சிவமயம்

அன்பு அறிவு தயை முதலிய சுபகுணங்களிற் சிறந்த உண்மையன்பராகிய தங்கட்கு சிவகடாக்ஷத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாக வென்று திருவருளை சிந்திக்கின்றேன். தங்கள் சுப சரித விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன். மற்ற சங்கதிகளை எனக்கு சாவகாசம் நேரிட்டபோது எழுதித் தெரிவிக்கின்றேன். தற்காலம் வேண்டுவதை இதனடியில் எழுதுகிறேன். அதாவது பொன்னுரைக்கின்ற உரைகல் ஒன்று வெள்ளியுரைக்கின்ற உரைகல் ஒன்று இவைகளையும் இவைகளுக்கு அடுத்த தராசு முதலிய கருவிகள் வைக்கின்ற பை ஒன்று இம்மூன்றும் வாங்கி பங்கியில் அனுப்பவேண்டும். சுமார் 5 பலம் 8 பலம்

நிறுக்கத்தக்க தராசு நேரிட்டாலும் அதனுடன் அனுப்ப வேண்டும்.

தேகத்தை பக்குவமாகப் பாராட்டிக்கொண்டு சிவசிந்தையும் ஜீவகாருண்ணியமும் மாறாமல் சாக்கிரதையோடு இருப்பீர்களாக. இதை சமரசவேத சன்மார்க்க சங்கத்தவ ரல்லாதவர்களுக்கு வெளிப்பட வாசிக்கப்படாது. வேணும். சிரஞ்சீவி சிரஞ்சீவி.

விபவ வருஷம்

சித்திரை மாதம் 23ஆம் நாள்

இங்ஙனம்

சிதம்பரம்

இராமலிங்கம்.

Stamped இஃது

சென்னப்பட்டணம் ஏழு கிணற்றுக் கடுத்த வீராசாமிப் பிள்ளை வீதியில் கீழண்டை வாடை நெ. 38ஆவது கதவிலக்கமுள்ள வீட்டில் இறுக்கம் மகாராஜராஜஸ்ரீ இரத்தின முதலியா ரவர்களுக்கு Madras

TRANSLATION – I meditate on Divine Grace that to you, a true friend who excels in love, knowledge, compassion and the other good qualities, long life and all prosperity may increase more and more by Siva's gracious glance. I wish to hear news of your welfare often. The other matters I will write to you when I have leisure. What is wanted now I write below. That is: one touchstone for testing gold, one touchstone for testing silver, and one bag to hold these and the balance and other tools that go with them. Buy these three and send them by parcel post. If you come across a balance that can weigh about 5 palam or 8 palam, send that with them too.

Look after your body well, and stay in care, never letting go of the thought of Siva and Jeevakarunyam. This must not be read out openly to those who are not of the Samarasa Veda Sanmarkka Sangam. This I ask. Chiranjeevi. Chiranjeevi.

The year Vibhava Chithirai 23 Thus, Chidambaram Ramalingam.

Stamped. This is for Irukkam Maharajarajasri Rathina Mudaliar, in the house with door number 38, east side, Veerasami Pillai Street, beside the Ezhukinaru, Chennai. Madras

COMMENTARY – A touchstone is the dark stone on which gold or silver is rubbed so that the streak it leaves shows its purity. A palam is an old Tamil unit of weight. The editor's title, 'The Yield of Gold', comes from this request.

Samarasa Veda Sanmarkka Sangam is the name of the fellowship of Vallalar's followers as this 1868 letter gives it. The letter is for its members only.

37. THIRUNAVALUR

To Irukkam Rathina Mudaliar, No. 38 Veerasami Pillai Street, Chennai. 26 May 1868 (the year Vibhava, Vaikasi 15)

Written, the letter says, at Thirunavalur on the north bank of the Kollidam, while he was travelling with about twenty companions. The Salai he will return to is the Dharmasalai, which the editor's introduction says was opened at Vadalur in 1867.

உ

சிவமயம்

கல்வி கேள்விகளாலும் அன்பறி வொழுக்கங்களாலுஞ் சிறந்த தங்கட்கு திருவருள் வலத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்து மேன்மேல் உண்டாக.

தங்கள் சுபசரித விபவங்களை அடிக்கடி கேட்டு மகிழ விருப்பம் உள்ளவனாக இருக்கிறேன். தாங்கள் அனுப்புவித்த பங்கியில் தாங்கள் கடிதத்தில் குறித்தபடி இருக்கக்கண்டு களிப்பொடு பெற்றுக் கொண்டேன். தாங்கள் அனுப்புவித்த பங்கிவந்த தினத்திற்றானே யெனக்கு ஊர்ப்புறங்களிற் போக அவசியமான பிரயாண நேரிட்டபடியால் உடனே பங்கிவந்த செய்தியைத் தங்களுக்குத் தெரியப் படுத்துவதற்குக் கூடாமையாயிற்று. இந்தக் கடிதமும் கொள்ளடத்தின் வடகரையில் திருநாவலூரில் இருந்து எழுதினேன். என்னுடன் சுமார் 20 பெயர்கள் வந்திருக்கின்றார்கள். மற்றவர்கள் சாலையிலிருக்கின்றார்கள். நான் சாலைக்கு வந்தவுடன் மற்ற சங்கதிகளைத் தபாலில் தெரிவிக்கிறேன். தாங்கள் சாக்கிரதையோடு தேகத்தைப் பக்குவமாகப் பாராட்டிக் கொண்டு சிவசிந்தையோ டிருக்க வேண்டும். தங்களுக்கும் நமக்கும் அன்பராகிய செல்வராய முதலியா ரவர்களுக்கும் இங்ஙனம் தெரிவிக்கவேண்டும். வாழ்க வாழ்க வாழ்க. நான் சுமார் பத்து தினத்தில் தருமச்சாலைக்கு வந்து சேர்வேன்.

விபவ வருஷம்

வைகாசி மாதம் 15ஆம் நாள்

சிதம்பரம்

இராமலிங்கம்.

இஃது

சென்னபட்டணம் ஏழுகிணற்றுக்கு அடுத்த வீராசாமிப் பிள்ளை வீதியில் 38ஆவது கதவிலக்கமுள்ள வீட்டில் மஹாராஜராஜஸ்ரீ முதலியார் இரத்தின முதலியா ரவர்கள் திவ்விய சமுகத்திற்கு.

TRANSLATION – To you, who excel in learning and listening and in love, knowledge and good conduct: by the power of Divine Grace may long life and all prosperity increase more and more.

I am one who wishes to hear news of your welfare often and to rejoice in it. I received with joy the parcel you sent, finding it as you described in your letter. On the very day your parcel came, a journey I had to make to the villages around fell to me, and so I could not let you know at once that the parcel had come. This letter too I wrote from Thirunavalur, on the north bank of the Kollidam. About 20 people have come with me. The others are at the Salai. As soon as I come back to the Salai I will send the other news by post. Take care, look after your body well, and remain in the thought of Siva. Tell this also to Selvaraya Mudaliar, who is dear to you and to me. May you flourish, may you flourish, may you flourish. I will reach the Dharmasalai in about ten days.

The year Vibhava Vaikasi 15 Chidambaram Ramalingam.

This is for the divine presence of Maharajarajasri Mudaliar Rathina Mudaliar, in the house with door number 38, Veerasami Pillai Street, beside the Ezhukinaru, Chennai.

COMMENTARY – The Salai and the Dharmasalai are the same place, the house of charity where the hungry were fed. Vallalar writes on the road, with twenty companions, and still sends word about a parcel and his disciple's health.

38. DISTASTE FOR WORLDLY PLEASURE

> *To Irukkam Rathina Mudaliar, care of Velu Mudaliar, Royal Hotel, Chennai. 20 August 1869 (Avani 6)*
>
> *From Chidambaram, the last of the letters to Rathina Mudaliar in this edition. The editor notes that the place where the signature would have been was cut out of the original for worship. Vallalar encloses a letter for Sellappa Mudaliar.*
>
> ๑

என் பிரியமுள்ள ரத்தன முதலியாரவர்களுக்கு
சிவானுக்கிரகத்தால் தீர்க்காயுளும் சகல சம்பத்தும் மேன்மேல் உண்டாவனவாக.

தாங்கள் எழுதிய கடிதத்தைக் கண்ணுற்றறிந்தேன். சடமும் துக்கமும் அநித்தியமு மாகிய உலகபோகத்தை விரும்புகின்ற மற்றவர்களைப்போல மயங்குதல் வேண்டாம். தங்கள் கருத்தின்படி நமது உயிர்த்துணைவனாகிய நடராஜப் பெருமான் திருவருளால் அதிசீக்கிரத்தில் கைகூடுமென்று நம்பியிருங்கள். நான் எப்போது கடிதத்தால் தெரிவிக்கிறேனோ அப்போது யாதொரு தடையுஞ் செய்யாமல் அக்கடிதத்தில் குறித்தவண்ணம் என்னிடம் வந்து சேருவதற்கு மனமுள்ளவர்களாக இருங்கள். தேகத்தை சாக்கிரதையாக பாராட்டி வாருங்கள். மற்ற சங்கதிகளை பின் தெரிவிக்கின்றேன். இதனுள் வைத்த கடிதத்தை செல்லப்ப முதலியார்க்கு சேர்ப்பியுங்கள். தாங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம், அஞ்சவேண்டாம்.

ஆவணி மாதம் 6ஆம் நாள்

இங்ஙனம்

சிதம்பரம்

இராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் ராயல் ஓட்டல் மகாராஜராஜஸ்ரீ வேலு முதலியார் அவர்கள் மேல் விலாசம் பார்வையிட்டு ஏழுகிணற்று வீதிக்கு சமீபம் மகாராஜராஜஸ்ரீ இரத்தின முதலியார் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு சேர்ப்பிக்க வேண்டும்.

TRANSLATION – To my dear Rathina Mudaliar: by Siva's grace may long life and all prosperity increase more and more.

I have read your letter and understood it. Do not be bewildered like the others who desire the pleasures of the world, which are inert, sorrowful and impermanent. Trust that, as you intend, it will come about very soon by the Divine Grace of Lord Nataraja, the companion of our life. Whenever I let you know by letter, be of a mind to come and join me as that letter says, without making any obstacle. Look after your body with care. I will tell you other matters later. Deliver the letter enclosed in this one to Sellappa Mudaliar. Do not fear anything, do not fear.

Avani 6 Thus, Chidambaram Ramalingam.

This: Royal Hotel, Chennai. Maharajarajasri Velu Mudaliar, on seeing the address on this cover, is to have it delivered to the divine presence of Maharajarajasri Rathina Mudaliar, near Ezhukinaru Street.

COMMENTARY – Sadam, 'inert', is matter without awareness. Worldly pleasure is called inert, sorrowful and passing, while Nataraja, the dancing Siva of Chidambaram, is named 'the companion of our life'.

PART II - LETTERS TO PUDUVAI VELU MUDALIAR

1. WHAT IS MONEY TO THIS DOG?

To Puduvai Velu Mudaliar, Royal Hotel, Chennai. 15 February 1859 (Masi 5), from Chidambaram

Velu Mudaliar of Puduvai was a close devotee whose letters reached him at the Royal Hotel in Chennai. Vallalar answers his letter of Thai 22, counsels patience with difficult people, refuses money for himself and asks that the letter be kept private. The editor notes that the place where the signature stood was cut out of the original for worship.

உ

சிவமயம்

கல்வி கேள்விகளாற் சிறந்து சிவபக்தி ஜீவகாருண்யஞ் சாந்தம் அன்பு முதலிய நற்குணங்களைப் பெற்ற நண்பர்க்கு அனந்தமுறை வந்தனம் வந்தனம் வந்தனம்.

தங்கள் சுபசரித்திர விபவங்களைக் கேட்க மிகவும் விருப்பமுள்ளவனாக விருக்கிறேன்.

தைமாசம் 22ஆம் தேதி தபால் மார்க்கமாகத் தாங்கள் வரவிடுத்த கடிதம் வரப்பெற்று வாசித்தறிந்து கொண்டேன். அதற்கு முன் மேற்படி தை மாதத்தில் தங்களுக்கு நான் எழுதி யனுப்புவித்த கடிதம் தங்களிடம் வந்து சேர்ந்ததில்லை போலத் தோன்றுகின்றது. அதை மன்னிக்க வேண்டும். 'நல்லாரெனத் தானனி விரும்பிக் கொண்டாரை அல்லாரெனினு மடக்கிக்கொளல் வேண்டும்' என்றபடி மகாராஜராஜஸ்ரீ ரத்ன முதலியாரைத் தாங்கள் அடக்கிக்கொண்டது பெரிய காரியம். அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் வாக்கினால் சமீபித்தும் மனத்தினால் நெடுந்தூரமாகியும் இருக்கவேண்டும். மகாராஜராஜஸ்ரீ மாப்பிள்ளை முதலியார் முதலானவரிடங்களிலும் இப்படியே

இருக்கவேண்டுமென்று நான் சொல்ல வேண்டுவதென்ன, தங்களுக்குத் தெரிந்தது தானே.

ஐயா! தற்காலத்தில் தங்கள் மனத்தில் நேரிட்ட சஞ்சலங்களை நிவர்த்திசெய்து இனியொரு காலங்களிலும் வாராதவண்ணம் பாதுகாத்து சதா சவுக்கியத்தைப்பெற்று சந்தோஷமடைய அனுக்கிரகிக்க வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். தாங்களும் இரவும் பகலும் நமது ஆண்டவனை இடைவிடாமல் சிந்தித்துக்கொண்டு சாக்கிரதையோடு இருக்கவேண்டுமென்று தங்களையும் பிரார்த்திக்கிறேன். நம்மைப்பெற்ற தாயைப் பார்க்கிலும் அனந்தங்கோடி பங்கு நம்மிடத்தில் தயவுள்ளவன் நமது ஆண்டவன். ஆகலால் நமக்கு ஒரு காலத்திலுங் குறைவு நேரிடாது. இது சத்தியம். ஆனால் நாம் நம்பிக்கை தவறாது இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் நான் விரித்துத் தங்களுக்குச் சொல்லவேண்டுவ தென்ன. என் போன்றவர்களெத்தனை பேருக்கோ தாங்கள் சொல்ல வல்லவர்களாக விருக்கின்றீர்கள். தங்களிடத்தில் நான் என்ன காரியஞ் சொல்லி யிருந்தேனோ அந்தக் காரியந் தங்கள் மனமட்டில் நிற்குமல்லவா. ஆதலால் அந்தக் காரியத்தைக் குறித்தே தற்காலம் பிரயத்தனப் பட்டுக்கொண் டிருக்கிறேன். நமது ஆண்டவன் அனுக்கிரகத்தால் அது முடியுங் காலத்தை இன்னுஞ் சில நாளில் தெரிந்து கொள்ளலாம். தாங்கள் இப்போது இவ்விடம் விஜயஞ்செய்ய எந்த விதத்தினும் எண்ண வேண்டுவதில்லை. நான் வந்துவிடுகிறேன். தாங்கள் வரவுக்குத் தக்க செலவு செய்துக்கொண்டிருக்க வேண்டும். பின்பு இஷ்டப்படி யெல்லாஞ் செய்ய நமது ஆண்டவன் அனுக்கிரகிப்பான். இதற்குச் சந்தேகமிராது. இது உண்மை. இந்த உண்மை தங்களுக்குத்தான் தெரியும். ஆதலால் தங்கள் மட்டில் இது தெரிவித்தேன்.

ஐயா! நானோ புத்தி தெரிந்த நாள் தொடங்கி இதுபரியந்தமும் இந்தப் பிண உடம்பும் இதற்குக் கொடுக்கின்ற பிண்ட துண்டங்களும் பெருஞ் சுமையாக இருக்கின்றதே, ஐயோ, இது என்றைக்குத் தொலையும் என்று எண்ணி எண்ணி இளைத்துத் துன்பப் படுகின்றவனாக இருக்கிறேன். இப்படிபட்ட இந்த நாய்க்குப் பணம் என்ன செய்ய. ஐயா, என்னைக் குறித்துத்

தாங்கள் பண விஷயத்தில் பிரயாசமெடுத்துக் கொள்ளவேண்டாம். தாங்கள் வேறு விதத்திலும் செலவுக்கு இடம் பார்க்கவேண்டாம். தாங்கள் மார்கழி மாதம் மகாராஜராஜஸ்ரீ முதலியார் நற்குணமணியாகிய சீனிவாச முதலியார்க்கு எழுதிய கடிதத்தால் அவர்கள் என்னைக் கேட்க நான் மறுக்க, மறித்தும் தங்கள் கடிதம் வர, இதனால் தங்கள் மனத்திற்கு வருத்த முண்டாமென்று மேற்படி முதலியார் அவர்களிடத்தில் பத்து ரூபாய் வாங்கிக் கொண்டேன். மற்றவை அவாளிடத்திற்றானே யிருக்கிறது. இதனைத் தாங்கள் அறியவேண்டும். மகாராஜராஜஸ்ரீ சீனிவாச முதலியார் மிகவு நல்லவர்கள், சிநேக பாத்திரர்கள், நல்ல புத்திமான்.

தங்கள் மட்டில் எழுதிய இந்தக் கடிதம் தங்கள் மட்டில் தானே இருக்க கிர்பை செய்யவேண்டும்.

மற்ற சங்கதிகளைப் பின்பு தெரிவிக்கிறேன். சரணம்.

மாசி மாதம் இங்ஙனம்

5ஆம் நாள் சிதம்பரம்

இராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் ராயல் வோட்டெல்

மஹாராஜராஜஸ்ரீ முதலியா ரவர்கள் பு. வேலு முதலியார்

அவர்கள் திவ்ய சமுகத்திற்கு வருவது.

சரூர் சரூர்

TRANSLATION – To the friend who excels in learning and in hearing the learned, and who has the good qualities of devotion to Siva, Jeevakarunyam, calm, love and the rest: countless times, greetings, greetings, greetings.

I very much wish to hear news of your welfare.

I received the letter you sent by post on the 22nd of Thai, and read and understood it. It seems that the letter I wrote and had sent to you before that, in the same month of Thai, did not reach you. Please forgive that. As it is said, "Those whom you once gladly took to yourself as good, even if they prove otherwise, you must bear with," that you have borne with the respected Rathina Mudaliar is a great thing. In all such places one must be near in word and far in mind. What need have I to tell you that you should be just so with the respected Mappillai Mudaliar and the others? You know it already.

Sir! I pray to the Lord that He remove the agitations that have now come upon your mind, guard you so that they never come again at any time, and grant that you attain lasting well-being and be happy. I pray you too that you stay with care, thinking of our Lord without pause night and day. Our Lord is endless crores of times kinder to us than the mother who bore us. So we will never lack anything at any time. This is the truth. But we must not fail in trust. What need is there for me to explain this to you at length? You are able to tell it to who knows how many like me. The matter I had told you about stays within your mind alone, does it not? So it is about that very matter that I am now making efforts. By our Lord's grace we may know within a few more days when it will be accomplished. You need not think in any way of coming here now. I will come. You must keep your spending in line with your income. Afterward our Lord will grant that everything be done as we wish. There will be no doubt of this. This is true. This truth is known to you alone. So I have made it known to you alone.

Sir! As for me, from the day I came to understanding until now, this corpse of a body and the lumps of food given to it have been a great burden. Alas, when will it be done with? So I think and think, and waste away in suffering. What is money to such a dog as this? Sir, do not take any trouble about money on my account. Do not look for means of

expense in any other way either. Because of the letter you wrote in Margazhi to the respected Mudaliar, Srinivasa Mudaliar, that jewel of good qualities, he asked me and I refused; then your letter came again; and thinking that this would grieve your mind, I took ten rupees from that Mudaliar. The rest is still with him. Please know this. The respected Srinivasa Mudaliar is very good, worthy of friendship, a man of sound sense.

This letter, written for you alone, please be so kind as to keep with you alone.

I will tell you the other matters later. Saranam.

Masi 5. Thus, Chidambaram Ramalingam.

This comes to the divine presence of Maharajarajasri Mudaliar P. Velu Mudaliar, Royal Hotel, Chennai. Urgent. Urgent.

COMMENTARY – The quoted line is from the Naladiyar (verse 221, as the editor's footnote identifies it). It asks us to bear with those we once took to ourselves as good, even when they prove otherwise. Vallalar adds his own rule for such company, near in word and far in mind, so that courtesy continues while the heart stays free.

God's kindness is measured against a mother's and found endlessly greater. For a worried friend the conclusion is practical. Want cannot finally reach one who trusts, so the one duty left is to keep that trust from failing.

Vallalar calls his body a corpse (pinam) and its food mere lumps (pindam), a wordplay the Tamil makes easy, and calls himself a dog, the lowest of servants, a self-description familiar from his hymns. The editor took the phrase as the letter's title. The refusal is gentle. He takes ten rupees only so that his friend will not be hurt, and says exactly where the rest is.

2. THE WILL OF LORD NATARAJA

To Puduvai Velu Mudaliar, Royal Hotel, Chennai. 23 May 1862 (Vaikasi 11)

Velu Mudaliar's letter of Chithirai 26 reached Vallalar only on Vaikasi 17, and he had begun to feel forgotten. Vallalar assures him that he never forgets him and promises to come to Chennai. The editor's footnote observes that something is wrong in the dates, since the letter is dated Vaikasi 11 yet speaks of a letter received on the 17th.

உ

சிவமயம்

அன்பு அறிவு ஒழுக்க முதலிய நற்குணங்களைப் பூஷணமாக மேம்பாட்டிற் பூண்டு என் மனத்தி லிடைவிடாது கண்மணி போன்று இருந்த தங்கட்கு விண்ணப்பம்.

தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விருப்பமுள்ளவனாக விருக்கின்றேன். சித்திரை மாதம் 26ஆம் தேதி தாங்கள் அனுப்பிய கடிதம் வையாசி மாதம் 17ஆம் தேதி என்னிடத்தில் வரப்பெற்றேன். நான் கனவினும் தங்களை மறக்கின்றவனல்ல. மறந்தவனுமல்ல. ஆனால் கால வேற்றுமையாலே நான் மறந்தவனாகத் தங்களுக்குத் தோற்றுகின்றது. அவ்வாறு எண்ணவேண்டாம். இது சத்தியம்.

நான் இந்த விசை பிரயாணப்பட்டு வருவது அவசியமானது என்று நம்பிக்கையோடு சொல்லுவேன். ஆயினும் சில தினம் ஏறும் அல்லது குறையும். அவ்வளவே அன்றி வருவது மாத்திரம் உண்மை. ஆகலில் தாங்கள் வரவேண்டுவதில்லை. அவசியம் நான் வருவேன் வருவேன் வருவேன். ஆனால் நடராஜப் பெருமான் திருவுளம் அறியேன். எவ்விதத்தினும் வருவதற்கு மாத்திரம் சந்தேகமில்லை. தங்கள் ஞாபகம் எக்காலத்திலும் என் மனத்தைவிட்டு நீங்காது விரித்து எழுதுவதற்கு சமய நேரிடாதபடியால் இந்த மட்டில் நிறுத்தினேன். மன்னிக்கவேண்டும். அநேக வந்தனம்.

வைகாசி மாதம் இங்ஙனம்

11ஆம் நாள் சி. இராமலிங்கம்.

இஃது

சென்னப்பட்டணம் ராயல் ஓட்டல்

மஹாராஜராஜஸ்ரீ முதலியார் வேலு முதலியா ரவர்கள்

திவ்ய சமுகத்திற்கு.

TRANSLATION – A petition to you, who wear love, wisdom, good conduct and the other good qualities as ornaments of distinction, and who have stayed in my mind without pause like the apple of my eye.

I wish to hear news of your welfare often. The letter you sent on the 26th of Chithirai reached me on the 17th of Vaikasi. I am not one who forgets you even in a dream. Nor have I forgotten you. But because of the circumstances of the times, it seems to you that I have forgotten. Do not think so. This is the truth.

I can say with confidence that it is necessary for me to travel and come this time. Still, it may be a few days more or less. That much only; my coming itself is certain. So you need not come. I will surely come, come, come. But I do not know the will of Lord Nataraja. Yet that I will come, in one way or another, there is no doubt at all. The thought of you never leaves my mind at any time. As no occasion has come to write at length, I have stopped here. Please forgive me. Many greetings.

Vaikasi 11. Thus, C. Ramalingam.

This is for the divine presence of Maharajarajasri Mudaliar Velu Mudaliar, Royal Hotel, Chennai.

COMMENTARY – Three times "I will come", and then "but I do not know the will of Lord Nataraja". The promise is complete on his side and left open on God's, which is how Vallalar speaks of his plans throughout these letters.

3. UNCEASING THOUGHT OF SIVA

To Puduvai Velu Mudaliar, Royal Hotel, Chennai. 7 November 1862 (Aippasi 23)

Vallalar had left Cuddalore on Aippasi 14 for Karunguzhi on a necessary matter, and plans travel to a town in the north-west and then to Chennai in about three months. Meanwhile he asks Velu Mudaliar to keep the body with care and to meditate without pause on the Five Letters and the holy feet of Siva.

உ

அன்பு அறிவு கல்வி கேள்வி முதலியவற்றிற் சிறந்து சிவநேயத்தில் நிறைந்து விளங்கிய தங்கட்கு வந்தனம் வந்தனம்.

தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகிறேனல்லது வேறொன்றும் விரும்பினே னில்லை. தாங்கள் சுமார் இருபது தினத்திற்கு முன் எழுதி தபாலில் அனுப்பிய கடிதம் கூடலூரில் வந்து சேரப்பெற்று அதிலுள்ள சங்கதிகளை யெல்லாம் அறிந்து கொண்டேன். நான் ஐப்பசி மாதம் 14ஆம் தேதி கூடலூரைவிட்டுப் புறப்பட்டு அவசியமான ஒரு காரியம்பற்றி கருங்குழிக்கு வந்தேன். இனி தங்கட்கு முன் குறித்தபடி வட மேற்கே ஒரு ஊர்க்கு வேறொரு காரியத்தின் பொருட்டு சுமார் 20 தினத்திற்குள் பிரயாணம் செல்வது உண்மை. அங்கிருந்து புறப்பட்டு சென்னபட்டணம் வருவது நிச்சயம். ஆனால் நிறைய மூன்று மாசஞ் செல்லும்போல் தோன்றுகிறது. தாங்கள் என் மேல் தயவுசெய்து அது பரியந்தம் சகித்திருங்கள். மகாராஜராஜஸ்ரீ நாயக்கரவர்களுக்கும் இவ்வாறே தெரியப்படுத்துங்கள். இது விஷயத்தில் செலவுக்கு ஒன்றும் வேண்டுவதில்லை. வேண்டியிருந்தால் வேண்டிய போது தெரிவிக்கிறேன். தாங்கள் தேக முதலிய கருவிகளை சாக்கிரதையொடு வைத்துக்கொண்டும் சிவபஞ்சாக்ஷரியையும் சிவபெருமான் திருவடிகளையும் இடைவிடாது சிந்தித்து தியானித்து வரவேண்டு மென்பது என் பிரார்த்தனை. தங்களை ஒரு கணப் போதாயினும் மறந்தவனல்ல. தாங்கள் கூடிய மட்டில் சர்வஜாக்கிரதையோடும் இப்போது

இருக்கிறபடியேயிருங்கள். இன்னுஞ் சில காலத்துள் விசேஷ சவுக்கியம் நேரிடுமென்று உண்மையாகச் சொல்லுகிறேன்.

வந்தனம் வந்தனம்.

ஐப்பசி மாதம் சிதம்பரம்

23ஆம் நாள் இராமலிங்கம்.

இஃது

சென்னபட்டணம் ராயல் ஓட்டல்

மகாராஜராஜஸ்ரீ முதலியார் வேலு முதலியா ரவர்கள்

திவ்ய சமுகத்திற்கு

TRANSLATION – Greetings, greetings to you, who excel in love, wisdom, learning, hearing and the rest, and who shine, full of love for Siva.

I wish only to hear news of your welfare often; I wish for nothing else. The letter you wrote and posted about twenty days ago reached me at Cuddalore, and I learned all that was in it. I set out from Cuddalore on the 14th of Aippasi and came to Karunguzhi on a necessary matter. Now, as I told you before, it is true that within about 20 days I will travel to a town to the north-west on another matter. It is certain that I will set out from there and come to Chennai. But it seems it will take a full three months. Please be kind to me and bear with it until then. Let the respected Nayakkar know the same. In this matter nothing is needed for expenses. If anything is needed, I will let you know when it is needed. My prayer is that you keep the body and the other faculties with care, and think on and meditate without pause on the Five Letters of Siva and the holy feet of Lord Siva. I have not forgotten you for even a moment. Stay as you are now, with all care, as far

as you can. I tell you truly that in a little while a special well-being will come about.

Greetings, greetings.

Aippasi 23. Chidambaram Ramalingam.

This is for the divine presence of Maharajarajasri Mudaliar Velu Mudaliar, Royal Hotel, Chennai.

COMMENTARY – Two things are joined here that newcomers often keep apart. The body and its faculties are to be kept with care, and the mind is to rest without break on the Five Letters (Sivayanama) and the feet of Siva. The same pairing of care for the instrument and constancy in meditation returns in many letters of this book.

4. AVVAIYAR'S SACRED WORD IS TRUTH

To Puduvai Velu Mudaliar. 2 March 1863 (Masi 20), from Chidambaram

Velu Mudaliar had written on Masi 8 that he was ill. Vallalar cannot leave because Ramakrishna Reddiar, master of the house where he takes his meals, is gravely ill, so he sends instead a verse of Avvaiyar on Sivayanama and a promise to come. No envelope is printed.

உ

சிவமயம்

அன்பு அறிவு தயவு முதலிய சுபகுணங்களிற் சிறந்து நமது கண்மணி போன்றுள்ள நண்பர்க்கு வந்தனம் வந்தனம்.

தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன்.

மாசி மாசம் 8ஆம் தேதியில் எழுதி தபாலில் விட்ட தங்கள் கடிதம் என்னிடத்து மேற்படி 20ஆம் தேதியில் வரப்பெற்று

அதிலுள்ள சங்கதிகளை அறிந்த நான் துன்பக் கடலில் விழுந்தேன். இன்னும் எழுந்ததில்லை. ஆனால் எழுந்திராம லிருக்கமாட்டேன். தங்களுடம்பிற்கு அபக்குவமென்று அறிந்த பொழுதே என் மனம் தங்களைப் பார்க்க வேண்டு மென்றும் தங்களுக்கு சவுக்கியம் உண்டாக வேண்டு மென்றும் கடவுளைச் சிந்தித்துக்கொண் டிருக்கின்றது. இது மாத்திரமோ, என் கண்கள் தங்களைக் காணவேண்டுமென்று துடிக்கின்ற என் கால்கள் தாங்களிருக்குந் திசையை நோக்கி நடக்கவேண்டுமென்று ஊருகின்றது. இவைகளைத் தற்காலத்தில் ஒரு பெரிய நிர்ப்பந்தந் தடுக்கின்றது. அதை தெரிவிக்கிறேன். நான் பொசிக்கின்ற ரெட்டியார் வீட்டில் தற்காலத்தில் எசமானராக விருக்கிற ராமகிருஷ்ண ரெட்டியார் என்பவர்க்கு சுமார் 4 மாசந் தொடங்கி உஷ்ண பேதியாகிக் கொண்டிருந்தது. மத்தியில் மத்தியில் நிற்பதும் பேதியாவதுமாக இருந்தது. இப்பொழுது சுமார் இருபது தினமாக வரை கடந்த பேதியாகி எழுந்திருக்க மாட்டாமல் மலசலம் படுக்கையில்தான் விடும்படியான அவ்வளவு அசத்தியும் மெலிவுமாக இருப்பது. சுமார் எட்டு தினத்திற்கு முன் போய்விட்ட தென்று கைவிட்டு விட்டார்கள். பின்பு சிவானுக்கிரகத்தால் அணுமாத்திரம் சௌக்கியம்போல் தோற்றுகின்றது. இப்படிப்பட்ட வேளையில் நான் புறப்பட்டு வந்தால் உலகம் நிந்திக்கும். கடவுளுக்குஞ் சம்மதமிராது. ஆனபடியால் அஞ்சுகிறேன். என்ன செய்வேன். அவர்க்கு உடம்பு சிறிது பக்குவமானால் புறப்பட்டு விடுவே னிற்கமாட்டேன். கடவுள் என்ன நினைத்திருக்கிறாரோ, அதுவுந் தெரிந்ததில்லை. சிவானுக்கிரகத்தால் பக்குவப்படுவதாக விருந்தால் 1? மாசஞ் செல்லும் சிறிது எழுந்து நடக்கவென்று தோற்றுகிறது. ஆதலால் கொஞ்சம் லகுவான வுடனே பிரயாணப்பட்டு தங்களைப் பார்க்க வருவேன். உண்மை. தாங்கள் கூடியவரையில் சாக்கிரதையாக விருந்து உடம்பை பக்குவஞ்செய்து கொள்ளவேண்டும். நான் இடைவிடாது கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

தாங்கள் அஞ்சவேண்டாம். 'சிவாயநம வென்று சிந்தித்திருப்பார்க் கபாய மொருநாளு மில்லை உபாயம் இதுவே மதியா மிதல்லாத வெல்லாம் விதியே மதியாய்விடும்' என்ற அவ்வையார் திருவாக்கு சத்தியம்

சத்தியம் சத்தியம். ஆதலால் அதை இடைவிடாது சிந்தித்துக் கொண்டே வாருங்கள். தங்கள் பிணிகள் பறந்தோடிப்போம். இதை நம்பவேண்டும். தாங்கள் பயப்படாது இருக்க வேண்டும்.

மகாராஜராஜஸ்ரீ நாயக்கரவர்களுக்கு தெரிவிக்கவேண்டியது ஒன்று. என்னெனில் நான் அவசியம் வருகிறேன். அது பரியந்தம் தேகசாக்கிரதை மனோசாக்கிரதை முதலான சாக்கிரதையோடு அஞ்சாமல் இருக்கவேண்டு மென்று தெரிவிக்க வேண்டும். ஸ்ரீ சிதம்பர சாமிகள், மகாராஜராஜஸ்ரீ ரத்தன முதலியார் முதலானவர்களுக்கும் பர்வதம்மாளுக்கும் என் வந்தனம் குறிப்பிக்க வேண்டும். தாங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். வந்தனம்.

மாசி மாதம் இங்ஙனம்

20ஆம் நாள் சிதம்பரம்

இராமலிங்கம்.

TRANSLATION – Greetings, greetings to the friend who excels in love, wisdom, kindness and the other auspicious qualities, and who is like the apple of our eye.

I wish to hear news of your welfare often.

Your letter, written and posted on the 8th of Masi, reached me on the 20th of the same month, and learning what was in it, I fell into an ocean of sorrow. I have not yet risen. But I will not stay without rising. From the moment I learned that your body was unwell, my mind has been thinking of God, that I must see you and that you must have well-being. Is that all? My eyes throb to see you, and my legs itch to walk toward the quarter where you are. At present a great constraint holds them back. I will tell you what it is. Ramakrishna Reddiar, who is now master of the Reddiar house where I take my meals, has had heat dysentery for about four months. Now and then it stopped and started again. Now for about twenty days it has been beyond all bounds, and he is so feeble and

wasted that he cannot rise and passes stool and urine in the bed itself. About eight days ago they gave him up, saying he was gone. Then, by Siva's grace, an atom of improvement seems to show. If I set out and come at such a time, the world will blame me. Nor will God consent. So I am afraid. What shall I do? If his body becomes a little better, I will set out; I will not stay. What God has in mind, that too I do not know. If by Siva's grace he is to recover, it seems it will take about one (?) month for him to rise a little and walk. So as soon as things ease a little I will set out and come to see you. This is true. Stay as careful as you can and bring your body back to health. I pray to God without pause.

Do not be afraid. Avvaiyar's sacred word, "For those who stay thinking 'Sivayanama' there is never any harm on any day; this alone is the means, this is wisdom; for all who lack it, fate itself becomes their wisdom," is truth, truth, truth. So keep thinking on it without pause. Your illnesses will fly away. You must believe this. You must stay without fear.

There is one thing to tell the respected Nayakkar, namely that I will surely come. Until then he must stay unafraid, with care of the body, care of the mind and every other care; please let him know this. Convey my greetings to Sri Chidambara Swamigal, the respected Rathina Mudaliar and the others, and to Parvathammal. Do not be afraid of anything. Greetings.

Masi 20. Thus, Chidambaram Ramalingam.

COMMENTARY – His eyes and feet pull him toward a sick friend, yet Vallalar stays with the gravely ill master of the house that feeds him. To leave a dying man who depends on him would be blamed by the world and, he says, would not have God's consent. Compassion is owed first to the one whose need lies nearest. The question mark after "one" is printed in the Tamil editions.

Sivayanama is the Five Letters, the Panchakshara. Avvaiyar's verse promises that harm never reaches one who keeps thinking it, and that for everyone else fate takes the place of wisdom. Vallalar seals it with "truth" three times and asks for unbroken remembrance.

5. NO PEACE

To Puduvai Velu Mudaliar. Panguni 28 (year not printed)

Velu Mudaliar had written on Friday, Panguni 18, apparently proposing to come to Vallalar. Vallalar asks him to wait until a task he has undertaken for someone is finished, and promises to come himself.

உ

சிவமயம்

நற்குணங்களிற் சிறந்த நண்பராகிய தங்கட்கு வந்தனம் வந்தனம். தாங்கள் பங்குனி மாதம் 18ஆம் தேதி சுக்கிர வாரம் காலையில் எழுதி விட்ட கடிதம் வரக்கண்டு அதிலுள்ள சங்கதிகளை அறிந்து கொண்டேன். இதன் அடியில் எழுதுகின்றவைகளை கவனமாகப் பார்க்க வேண்டும். என்னெனில் நான் பங்குனி மாசக் கடைசியில் வருவதாக முன் குறித்திருந்தது உண்மைதான். ஆனால் நான் ஒருவர் நிமித்தம் ஒப்புக்கொண்ட ஒரு காரியம் இன்னும் முடிவுபெற இல்லை. அது பங்குனி மாதம் கடைசியில் முடிந்தாலும் அல்லது சித்திரை மாசத்தில் முடிந்தாலும் முடிந்தவுடன் பிரயாணப்பட்டு அவ்விடம் வருவேன். இது உண்மை. இது நிற்க, எனக்கு நிம்மதியில்லாமல் தாங்க ளிவ்விடம் வந்தால் தங்களுக்கு எப்படி நிம்மதி வரும். வாராது. ஆதலால் நான் அவ்விடம் வருமளவும் தாங்கள் இவ்விடம் வராமலிருக்க வேண்டும். இதை அலக்ஷியமாக எண்ணவேண்டாம். எந்தவிதத்திலும் நான் அவ்விடம் வரத்தா னிருக்கிறேன். வருவேன் வருவேன். அவசரப்படவேண்டாம். அவசரப் பட்டால் நிம்மதி வாராது. ஆதலால் பொறுத்திருங்கள். எவ்விதத்திலும் என் இஷ்டப்படியே தாங்களிருந்தால் நன்மை.

> இது உண்மை உண்மை. கடிதம் அகப்படாத குறையால் இந்த மட்டில் எழுதினேன். மன்னிக்க வேண்டும். வந்தனம்.
>
> பங்குனி மாதம் 28ஆம் நாள் சி. இராமலிங்கம்
>
> மகாராஜராஜஸ்ரீ முதலியார் வேலு முதலியார் அவர்கள் ...

TRANSLATION – Greetings, greetings to you, a friend excelling in good qualities. I saw the letter you wrote and sent on the morning of Friday, the 18th of Panguni, and learned what was in it. What I write below you must read with attention. It is this. It is true that I had indicated before that I would come at the end of Panguni. But a task I took on for someone's sake is not yet finished. Whether it ends at the end of Panguni or in Chithirai, as soon as it is finished I will set out and come there. This is true. That aside, if you come here while I have no peace, how will peace come to you? It will not. So until I come there, you must not come here. Do not take this lightly. In any case I am certainly coming there. I will come, I will come. Do not hurry. If you hurry, peace will not come. So be patient. In every way, it is good if you stay as I wish. This is true, true. For want of paper I have written only this much. Please forgive me. Greetings.

Panguni 28. C. Ramalingam

To Maharajarajasri Mudaliar Velu Mudaliar ...

6. THE PREFACES

> *To Puduvai Velu Mudaliar. Margazhi 15 (year not printed), from Chidambaram*
>
> *Through Chiranjeevi Sundara Pillai, Vallalar learned of a plan Velu Mudaliar had in mind, and he leaves the arrangement to him. Notes added after the signature approve the prefaces written by Sundara Pillai and Chidambara Swamigal and ask that both be printed. No envelope is printed.*
>
> உ

சிவமயம்

அன்பு அறிவு கல்வி கேள்வி முதலியவற்றில் சிறந்த தங்களுக்கு வந்தனம். தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விரும்புகின்றேன். தங்கள் மனத்திலுள்ள குறிப்பை சிரஞ்சீவி சுந்தரப் பிள்ளையால் தெரிந்து கொண்டேன். தாங்கள் உலகநடை தெரிந்த விவகாரிகளாதலால் தாங்களே தங்கள் கருத்தின்படி செய்துக்கொள்வதில் யாதொரு விகற்பமும் நேரிடாதென்று நம்புகிறேன்.

நான் அது விஷயத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் தாங்கள் நேரே அவர்களை அழைத்து ஒருமையோடு தங்கள் கருத்தின்படி ஏற்பாடு செய்துக்கொள்வது உத்தமமாகத் தோன்றுகிறது. தங்கள் கருத்தின்படி செய்துக் கொள்வதற்கு நான் தடையானவ னல்ல.

ஆகலில் யாவர்க்கும் மனது விகற்ப மாகாதபடிக்கும் தயவு வேறுபடாதபடிக்கும் தங்கள் கருத்தின்படி நடத்தலாம். மற்ற சங்கதிகளை தை மாதத்தில் தெரிவிக்கிறேன். வந்தனம்.

மார்கழி மாதம் இங்ஙனம்

15ஆம் நாள் சிதம்பரம் இராமலிங்கம்

தாங்கள் என் விஷயத்தில் மிகவும் சுதந்தர முடையவர்க ளாதலால் இப்படி எழுதினேன்.

அன்புள்ள ஐயா

நமது சுந்தரப்பிள்ளை எழுதின பாயிரம் நன்றா யிருக்கின்றது. அதை அச்சிடுவிப்பீர்களாக.

அன்றி நமது சிதம்பர சாமிகள் பாயிரமும் நன்றாயிருக்கின்றது. அதையும் அப்படி செய்க. வந்தனம்.

TRANSLATION – Greetings to you, who excel in love, wisdom, learning, hearing and the rest. I wish to hear news of your welfare often. I learned what is in your mind through

Chiranjeevi Sundara Pillai. Since you are a man of affairs who knows the ways of the world, I trust that no difficulty will arise from your arranging it yourself according to your own view.

Rather than my entering into that matter, it seems best that you call them directly and arrange things in harmony, according to your view. I am no obstacle to your doing it as you think fit.

So you may proceed as you think fit, in such a way that no one's mind is divided and no one's kindness is altered. I will let you know the other matters in Thai. Greetings.

Margazhi 15. Thus, Chidambaram Ramalingam

Because you have full liberty in matters that concern me, I have written in this way.

Dear Sir,

The preface written by our Sundara Pillai is good. Please have it printed.

And our Chidambara Swamigal's preface too is good. Do the same with it. Greetings.

COMMENTARY – A payiram is a preface, usually in verse, praising a work and its author and printed at its head. Vallalar judges both prefaces good and wants both printed, while leaving the rest of the arrangement to Velu Mudaliar.

7. THIRU CHITRAMBALAM

To Puduvai Velu Mudaliar. No date printed (answering his letter of Aadi 16)

Velu Mudaliar had been cheated by two men, Sundara Mudali and Kanda Mudali. Vallalar consoles him and explains that his own coming waits on Lord Nataraja, who answers each time "stay a little longer". The editor notes that this letter is absent from A. Balakrishna Pillai's edition and comes from the Chennai Sanmarga Sangam edition; no date or signature is printed.

அன்பு அறிவு இரக்கம் ஈஸ்வரபக்தி முதலிய நற்குணங்களாற் சிறந்த, எனக்கு நற்றுணையாக விளங்கிய தங்கள் சமுகத்திற்கு வணக்கஞ் செய்து வரையும் விண்ணப்பம்.

தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்டு மகிழ விருப்பமுள்ளவனாக இருக்கின்றேன்.

அன்புள்ள ஐயா, தாங்கள் ஆடி மாதம் 16ஆம் தேதி விடுத்த கடிதம் நேற்றைய தினம் வரக்கண்டு அதிலுள்ளவைகளை அறிந்து கொண்டேன். இனி, இதன் அடியில் எழுதும் வரிகளைச்சற்றே தயவுசெய்து பார்க்கத் தொடங்கினால் தங்கள் தோள்களே துணையாகக் கொண்டு பார்ப்பீர்க ளென்று நம்புகிறேன். சுந்தரமுதலி என்பவரும், கந்தமுதலி என்பவரும் பேரால் பெரியவர்களாகத் தோன்றினாலும் குணத்தால் குன்றிமணியிலும் சிறியவர்களாகக் காண்கிறார்கள்.

இவர் தற்காலத்திற் செய்த மோசம் தங்களுக்குச் சிறிது துன்பஞ் செய்வது. ஆனால் இதுபெரிதல்ல, இனி உடனே தங்களுக்கு உண்டு பண்ணிய நஷ்டத்துக்கு ஈடாக, இந்த இருவரும் மோசம்போய் நஷ்டப்பட, அதைக்கண்டு தங்களுக்கு நேரிடும் துன்பமே பெரிதாகக் காணுமென்று உண்மை யாகச் சொல்ல மாட்டுவேன். மோசஞ் செய்தவர் நாசமடைவார்கள் என்கிற உலக வழக்கு வீண் போகாது. இது குறித்துத் தாங்கள் கிலேசப்பட வேண்டுவதில்லை. தங்களுக்கு நடராஜப்பெருமான், ஒரு விதத்திலும் குறைவு வரச் செய்யார். இது சத்தியம். நான் அவ்விடம் வருமளவும், தாங்கள் தற்காலத்திலிருக்கிறபடியே ஓர் அலுவலில் இருக்கவேண்டும் நான் வந்த பின்பு, தங்கள் இஷ்டப்படியே நடத்திக் கொள்ளலாம். என் தேகம், மறையாமலிருக்கு மாகில் எவ்விதத்திலும் தங்கள் கருத்தை நடராஜப் பெருமான் திருவடித்துணையைக் கொண்டு முடித்துவிப்பேன். இதில் சந்தேகம் வேண்டுவதில்லை.

என்னிடத்தில் தங்களுக்கு இருக்கின்ற பிரியம் எவ்வளவு அதில் எண்மடங்கு தங்களிடத்தில் எனக்கு இருக்கின்றதென்று நான் சொல்வதென்ன, கடவுளுக்குத் தெரியும். ஆதலால் என்னிடத்தில் அவநம்பிக்கை வேண்டுவதில்லை. நான் வருவதற்குத் தடையென்னவென்றால், நமது நடராஜப்

பெருமானைக் கேட்குந்தோறும் "நல்லது இன்னஞ்சற்றே பொறு, இன்னஞ்சற்றே இரு" என்று உத்தரவாகிறது. இதை அசலார்க்குச் சொன்னால் நம்பார்கள். தங்கள் மட்டில் மாத்திரம் குறிப்பித்தேன். ஆனால் "இன்னஞ் சற்றே யிரு" என்ற படியால் இரண்டொருமாதமாகக் காணுகின்றது. தாங்கள் அவசரப்பட வேண்டாம். இப்போது எவ்வளவு வருத்தப்படுகின்றீர்களோ அதற்குப் பதின்மடங்கு சௌக்கியம் பின்பு கிடைக்கும். இது உண்மை, உண்மை, உண்மை. நான் எவ்வகையாலும், இன்னும் இரண்டு மாதத்தில் வருகிறேன். அது பரியந்தம் பொறுத்திருக்க வேண்டும். சிவானுபவச் சொரூபியாகிய சுவாமி சிதம்பர சுவாமிகள், வெள்ளை வேட்டி திருச்சிற்றம்பல சுவாமிகள், ஓதுவாமூர்த்தி சுந்தரம் பிள்ளை இவர்களுக்கும் என் வந்தனம் குறிப்பிக்க மனமிருந்தால் குறிப்பிக்கலாம். இனி தாங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். சதா நடராஜப் பெருமானைச் சிந்தித்துக்கொண்டு அலுவலை நடத்த வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். வந்தனம், வந்தனம்.

TRANSLATION – A petition, written with reverence to your presence, you who excel in love, wisdom, mercy, devotion to God and the other good qualities, and who have been a good support to me.

I wish to hear news of your welfare often and to rejoice in it.

Dear Sir, I saw yesterday the letter you sent on the 16th of Aadi, and learned what was in it. Now, if you will kindly begin to look at the lines I write below, I trust you will look at them with your own shoulders as your support. Sundara Mudali and Kanda Mudali, though they seem great by name, are seen to be smaller than a kundri seed in character.

The fraud these men have now committed gives you some distress. But this is not great. I can say truly that soon, in return for the loss they have caused you, these two will themselves be cheated and suffer loss, and the distress that comes to you on seeing it will appear the greater. The common saying that those who cheat come to ruin will not prove empty. You need not be troubled about this. Lord

Nataraja will not let you lack in any way. This is the truth. Until I come there, you must stay in a post just as you are now. After I come, you may arrange things as you wish. If my body does not vanish, I will by every means bring your purpose to completion, with the holy feet of Lord Nataraja as my support. There need be no doubt of this.

However much love you have for me, I have eight times as much for you; what need is there for me to say it? God knows. So you need have no distrust of me. As for what keeps me from coming: whenever I ask our Lord Nataraja, the answer comes, "Good. Bear a little longer. Stay a little longer." If I told this to outsiders, they would not believe it. I have mentioned it to you alone. But since it was "Stay a little longer," it looks like a month or two. Do not hurry. Ten times as much ease as the distress you feel now will come to you later. This is true, true, true. By every means I will come within two more months. Until then you must be patient. To Swami Chidambara Swamigal, the very form of the experience of Siva, to Vellai Vetti Thiruchitrambala Swamigal, and to Oduvamurthi Sundaram Pillai, you may convey my greetings if you are minded to. Now do not be afraid of anything. I pray that you carry on your work, always thinking of Lord Nataraja. Greetings, greetings.

COMMENTARY – To read "with your own shoulders as support" is to brace oneself for hard news. The kundri seed (kundrimani), the tiny red-and-black seed once used as a goldsmith's weight, is the smallest measure at hand. Vallalar gives the two men their names without the respectful ending, Mudali for Mudaliar.

The present loss, Vallalar says, is small. The greater pain will come later, when the two men are ruined in their turn and Velu Mudaliar has to watch it, a pain only a kind heart would feel. For his own death he writes "if my body does not vanish" (maraiyamal), where one would expect "if I live".

Vallalar reports a living exchange. Whenever he asks Lord Nataraja, the reply comes, "Good. Bear a little longer. Stay a little longer." He tells it only to Velu Mudaliar, knowing that outsiders would not believe it, and reads the reply plainly as a month or two.

PART III - LETTERS TO OTHER DEVOTEES

1. ONE WHO LONGS FOR THE KNOWLEDGE OF SIVA

To Nayinar Ramasami Nayinar, Thirunarungundram. 2 August 1866 (the year Akshaya, Aadi 19)

Two companions, Ramalinga Murthigal and Shanmuga Pillai, had left saying they would visit Ramasami Nayinar of Thirunarungundram. Writing from Cuddalore, Vallalar asks where they are and wants them sent back, since he hears of drought there. The editor saw Vallalar's handwritten original of this letter.

உ

சுபம் உண்டாக. சுபம்.

அன்பு அறிவு ஒழுக்கம் கருணை முதலிய நன்மைகளாற் சிறந்து சிவத்தைப் பொருளென் றுணர்ந்து சன்மார்க்கத்தில் விளங்குகின்ற தங்கட்கு வந்தனம் வந்தனம்.

தங்கள் சுபசரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விருப்பமுடையவனாக விருக்கிறேன்.

அன்புள்ள ஐயா - சுமார் இருபத்தைந்து தினத்திற்கு முன் இவ்விடத்திலிருந்து சிவஞான விருப்பினராகிய ராமலிங்க மூர்த்திகளும் சண்முகப் பிள்ளை என்பவரும் தங்களிடம் போய் வருவதாகக் குறித்து வந்தார்கள். அவர்கள் அவ்விடம் வந்திருப்பதும் வேறிடம் போயிருப்பதுந் தெரியவில்லை. தங்களிடத்தில் அவர்கள் இருந்தால், தற்காலம் அவ்விடத்தில் மழை யில்லாமையால் மிகவும் நிற்பந்தமாக விருப்பதாய் கேள்விப்படுகிறேன். ஆதலால், தாங்கள் அவர்களை இவ்விடம் வரும்படி செய்யவேண்டும். அவர்கள் தங்களிடத்தில் இல்லாமல் வேறிடத்தி லிருந்தால், அவ்விடம் இவ்விடமென்று எனக்குத் தெரிவிக்கவேண்டும். தாங்களும் சிவத்தியான சகிதர்களாய் தேக விஷயத்திலு மற்றைக் குடும்ப

விஷயத்திலும் சர்வ சாக்கிரதையோடு இருக்க வேண்டும். நற்குணத்திலும் சிவபத்தியிலும் சிறந்த தங்கள் தம்பியார்க்கும் தங்கள் புத்திர சிகாமணிக்கும் என் க்ஷேமம் குறிக்கவேண்டும். நான் தற்காலம் கூடலூரி லிருக்கின்றேன். வந்தனம். நமது ராமலிங்க மூர்த்திகளுக்கும் வந்தனம்.

அக்ஷய வருடம் ஆடி மாதம் இங்ஙனம்

19ஆம் நாள் சிதம்பரம்

இராமலிங்கம்.

பதில் உத்தரம் தபால் மார்க்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

இஃது

திருநறுங்குன்றம் மஹாராஜராஜஶ்ரீ நயினார்

ராமசாமி நயினாரவர்கள் திவ்விய சமுகத்திற்கு

TRANSLATION – May good come. Good.

Greetings, greetings to you, who excel in love, wisdom, good conduct, compassion and the other virtues, who have understood Siva as the one true Reality, and who shine in Sanmarkkam.

I wish to hear news of your welfare often.

Dear Sir, about twenty-five days ago Ramalinga Murthigal, who longs for the knowledge of Siva, and one Shanmuga Pillai left here, saying they would go to you and come back. Whether they came there or went elsewhere is not known. If they are with you: I hear that there is great hardship there just now for want of rain. So you must have them come here. If they are not with you but somewhere else, you must let me know whether they are in this place or that. You too must stay with meditation on Siva, and with all care in matters of the body and of the family. Convey my good wishes to your younger brother, who excels in good qualities and devotion

to Siva, and to your jewel of a son. I am at present at Cuddalore. Greetings. Greetings also to our Ramalinga Murthigal.

The year Akshaya, Aadi 19. Thus, Chidambaram Ramalingam.

Please send a reply by post.

This is for the divine presence of Maharajarajasri Nayinar Ramasami Nayinar, Thirunarungundram.

2. THE ANAHATA AMONG THE SIX ADHARAS

To Pillai Ponnusami Pillai. Avani 8 (year not printed), from Chidambaram

Ponnusami Pillai used to send betel leaves and lemons with his letters as a mark of respect, as the editor notes, and corresponded often with Vallalar, though this is the only letter to him that has come to light. The reply gives a remedy, a teaching on the Anahata centre and news of an errand to Cuddalore. The editor saw the handwritten original.

சத்குரவே நம:

கல்வி கேள்விகளிற் சிறந்து அருளறி வொழுக்கங்களி னியைந்து விளங்குகின்ற தங்கட்கு அனந்த முறை வந்தனம் வந்தனம். தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி கேட்க விருப்ப முள்ளவனாக விருக்கிறேன். தாங்கள் கொத்தன் வசம் அனுப்புவித்த கடிதமும் நாகவல்லியும் சம்பீர பலங்களும் வரப்பெற்றேம். இவ்விடம் கடிதம் அனுப்புந் தோறும் இந்தப் பிரகாரம் அனுப்புவது பிரயாசம் என்று என் மனம் என்னை வருத்துகின்றது. இது நிற்க. இனி தங்கள் கடிதத்துக்கு உத்தரம் எழுதுகிறேன்.

அதாவது தங்கள் தமயனார் விஷயத்தில் தாங்கள் எத்தன்மையுடையவர்களாக இருக்கின்றீர்களோ அத்தன்மை நானும் உடையவனாக விருக்கின்றேன்.

சீரகத்தைக் கியாழஞ் செய்து, அந்த கியாழத்தில் சுக்கை யூறவைத்து, சாமம் சென்ற பின்பு எடுத்து உலர்த்தித் தூள்செய்து வைத்துக்கொண்டு, அந்தத் தூள் காசிடை, அதில், பஸ்பம் அரிசியிடைவைத்து, நெய்யில் குழைத்துச் சாப்பிடவேண்டும். பத்தியம் இச்சா பத்தியம். தலைமுழுக்கு பசு நெய்யில் முழுகவேண்டும். ஆறாதாரத்தில் அனாகதத்தில் சத்தி சிவம் பத்திதழில் இருப்பதாகவே கொள்ளவேண்டும். இரண்டிதழ் ஆசனமாகக் கொள்ளவேண்டும். அன்றியும், பன்னிரண் டிதழில் எட்டிதழ் சத்தியிருப்பு, இரண்டிதழ் சிவத்தின் இருப்பு, மற்றை யிரண்டிதழ் மேலுங் கீழும் அடையிருப்பு. இது இன்னுஞ் சிலநாள் சென்ற பின்பு தங்களுக்கு நன்றாக அனுபவப்படும். கூடலூர்க்கு மனிதனை அனுப்ப அந்த வேஷக்காரன் எவ்விடத்துக்கோ போயிருக்கிறதாக இன்னும் பத்துதினஞ் சென்ற பின்பு வருவா னென்று அவன் பெண்சாதி சொன்னதாகச் சமாச்சாரங் கொண்டுவந்தான். இனி இன்னும் சுமார் ஒரு மாதஞ் சென்ற பின்பு தங்கள் கருத்தின்படி தெரிவிக்கிறேன். மன்னிக்க வேண்டும். தாங்கள் தங்கள் தேகத்தை பொன்போல சர்வ சாக்கிரதையோடு பாராட்டிக் கொண்டு வரவேண்டும். வந்தனம் மன்னிக்க. வந்தனம்.

ஆவணி மாதம் இங்ஙனம்

எட்டாம் நாள் தங்களிஷ்டன்

சிதம்பரம் இராமலிங்கம்

இஃது க்ஷேமம்

மஹாராஜராஜஸ்ரீ பிள்ளை பொன்னுசாமிப்

பிள்ளை யவர்கள் திவ்விய சமுகத்திற்கு. க்ஷேமம்.

TRANSLATION – Salutation to the true Guru (Sadgurave namah).

